உ
வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } பிலவ - புரட்டாசி 10—10—61 { இதழ் 11

1 OCT

உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சமயமும் கலைகளும்

உள்ளத்தே பதிந்து உணர்வைக் கிளர்ச்சிபெறச்செய்யும் திறம் கலைக்கு உண்டு. கலையைக் கடவுள் தொடர்பொடு கண்டபெருமை நம்நாட்டிற்கே உரியதாகும்; வேறு எந்நாட்டிற்கும் இல்லாதபெருமையிது. நம்நாட்டில் சமயம் வளர்த்த காவலர்களாக விளங்கிய அருட்சான்றோர்கள் கலைவடிவாக அமைந்த இறைவனைப் போற்றினர். இறைவனை அறுபத்து நான்கு கலைவடிவானவன் என்றும், அவற்றின் பொருளாக அமைபவன் என்றும் ஏத்தினர். அப்பர் சுவாமிகள்,

"தளங்கிளரும் தாமரையா தனத்தான் கண்டாய்
தசரதன்றன் மகன்அசைவு தவிர்த்தான் கண்டாய்
இளம்பிறையும் முதிர்சடைமேல் வைத்தான் கண்டாய்
எட்டெட் டிருங்கலையும் ஆனான் கண்டாய்"

என்று கோடீச்சுரனையும், "கல்விஞானக் கலைப்பொருள் ஆயவன்" என்று திருக்கானூர்இறைவனையும் ஏத்துவர். கலை வடிவாக அமைந்த இறைவன் உறையும் திருக்கோயில்களோ கலைவளர்க்கும் கூடங்களாகவே அமைந்துள்ளன. சிற்பம், சித்திரம், முதலிய கலைச்சிறப்புக்கள் அமையத் திகழ்ந்து விளங்குகின்றன நம்நாட்டுத் திருக்கோயில்கள். கண்ணைக் கவரும் சிற்பவேலைப்பாடுகளைத் திருக்கோயில்களிலேயே அமைத்தார்கள். அக்கால அரசர்களும் தாம்வாழும் அரண் மனையைக் கலைச்சிறப்புடன் விளங்குவித்ததைவிடத் தான் வழிபடு கடவுள் வாழும் ஆலயங்கள் சிறப்புற்று விளங்க வேண்டுமென்ற சிந்தைகொண்டனர். இராசராசசோழன் இராசேந்திர சோழன் முதலிய மாமன்னர்கள் கட்டிய பெருங்கோயில்களே இதற்கு விளக்கமாக இன்று நின்று நிலவுகின்றன. அந்த உயரிய பக்தி மேம்பாட்டால் திருக் கோயில்களைச் சார்ந்து கலைகள் வளர்ந்து செழித்தவகையை வரலாறு கூறுகிறது.

மகாபலிபுரம், காஞ்சிக் கயிலாயநாதர் கோயில், கங்கை கொண்டசோழபுரம், சிதம்பரம், தஞ்சைப் பெரியகோயில், பேரூர் திருக்கோயில், தாராசுரம், திருபுவனம் திருக்கோயில் கள் முதலியவற்றைக் காணும்போது சமயத்தை ஒட்டி வளர்ந்து தழைத்த கலைமணம் வீசும் கவினையே காண் கின்றோம். சுட்டகல்லால் கட்டிவந்த சங்ககாலக்கோயில்கள் பல்லவர் வருகைக்குப் பின்னர் கற்கோயில்களாகவும், குகைக் கோயில்களாகவும் மாறின. அங்கும் நாட்பூசனை சிறப்புப்பூசனை முதலியன நல்லவண்ணமே நிகழ்தற்கென அறக் கட்டளைகளும் அமைத்துப் புரந்தனர் அரசர்கள். ஆடல் பாடற் கலைகளும் கோயிலில் வளர்ந்துவரலாயின.

சமயத்தைச் சார்ந்து ஏனைய கலைகள் இவ்வாறு பெருகிச் செழித்ததுபோலவே இலக்கியக் கலையும் சமயச் சார்பாற் பெருகி எழலாயிற்று. ஏனைய நாடுகளைப்போல் மதச் சார் பற்ற இலக்கியம் தமிழகத்தில் இல்லையென்றே கூறிவிட லாம். கடவுள் கோள்கை மறவாத் தமிழ்ப் பெருமக்கள்

'எங்கும் இறை' என்ற ஒப்பற்ற உயர் குறிக்கோளுடன் வாழ்ந்தவர்கள் ஆதலால் இவ்வாறு பெருமைபெற்றே வாழ்ந்தனர். தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ந்தாலும் சமயத்தின் நிழலில் அவை வளர்ந்தவாற்றை நன்கு அறியலாம். இலக்கணம், இலக்கியம், புராணம், இதிகாசம், உரைநடைகள் முதலிய பல நிலைகளில் இலக்கியக்கலை வளர்ந்து பெருகி இவ்விருபதாம் நூற்றாண்டில் தலைசிறந்து நிற்கின்றது.

இவ்வாறு கலைகளைச் சமயம் புரந்த மெய்ம்மையை வரலாற்றில் அறியலாம். இன்றும் சமயம் காத்துநிற்கும் அறப்பெருநிலையங்களாகிய ஆதீனங்களிலேயே கலைகள் செழித்து நிற்றலைக் கண்கூடாகக் காணலாம். கலைகளைப் பெண்ணுருவாக்கிக் 'கலைமகள்' என்று வழிபடும் சிறப்பும், ஆண்டுதோறும் நவராத்திரி என்று அமைத்து விழா எடுத்து வரும் மாண்பும் தமிழர்க்கே உரிய சிறப்புக்கள்.

தருமையாதீனம் வழக்கம்போல் கலைவிழாக்கொண்டாடி வருவது தமிழகம் அறிந்தது. கோடியருச்சனைகளைக் கொண்டருளிவரும் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்குச் சதசண்டி வேள்வி முதலிய சிறப்பு வழிபாட்டு நிகழ்ச்சிகளுடன் ஆதீனக் கல்விநிலையங்களின் கலைமகள் விழாவையும் இணைத்து நிகழ்த்திவரும் நிலையில் இவ்வாண்டும் 10—10—61 முதல் 19—10—61 வரை விழா நிகழ்கிறது. தருமையாதீனத்தில் அருளரசோச்சும் இருபத்தைந்தாவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் முத்தமிழையும் முதற் கலைகளையும் பிழையறக் காத்துவரும் பேரருளாளர்களாகப் பிறங்கிவருபவர்கள். அவர்கள் அருளாசியால் சமயமும் கலைகளும் நிலைபேறும் வளர்ச்சியும் எய்தி வருகின்றன. இந்நிலையில் தமிழகத்தின் சமயங்களும் கலைகளும் வையமெங்கும் பரவவேண்டும். அவை வாயிலாகப் பாரதப் பண்பாடும், தமிழகச் சிறப்புநிலையும் உலக அரங்கில் ஒளிர வேண்டும்; அதற்கு நல்லருள் புரிக எனக் கலையறியும் பெருமானாகிய செந்தமிழ்ச் சொக்கர் திருவருளை வேண்டுவோமாக.

நவராத்திரி விளக்கம்

நவராத்திரி என்பது வேனிற்காலமாகிய (வசந்தருது) சித்திரை மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பதுநாள் உமாதேவியைக் குறித்து விரதமிருந்து பூசிக்கும் வசந்த நவராத்திரியையும், கார்காலமாகிய (சரத்ருது) புரட்டாசி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பதுநாள் பூசிக்கும் சாரதா நவராத்திரியையும் குறிக்கும். இந்நாட்களில் தேவியைப் பூசிக்க வேண்டிய அவசியம் என்னவேனில், வசந்தருது, சரத்ருது வாகிய இரண்டு ருதுக்களும் யமனுடைய இரண்டு கோரைப் பற்களுக்குச் சமமாய் உள்ளவை. அவ்விரண்டனுள் வசந்த ருதுவில் வெப்பமிகுதியால் அம்மை முதலிய நோய்களும், சரத்ருதுவில் தட்பமிகுதியால் காலரா முதலிய நோய்களும் பெருகி மக்களைத் துன்புறுத்துவதால் அவற்றினின்றும் விடுதலை பெற உலகமாதாவாகிய உமாதேவியை விரதமிருந்து பூசித்தல் வேண்டுமென்பதாகும். புரட்டாசி மாதத்தில் நவராத்திரியைப் பத்துநாட்கள் கொண்டாடுவதால் தசராத்திரி என்றும், தசரா என்றும் வழங்குவர். இஃது அன்றிப் பொதுவாக அம்பிகையைப் பூசித்தற்குரிய தினங்கள் மங்களவாரம், சுக்ரவாரம், கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி, பிரதோஷம் முதலியனவாம்.

விரதம் அனுட்டிக்கும் முறை

அமாவாசையன்று ஒருவேளை உணவுடன் உபவாசம் இருந்து அடுத்த ஒன்பது நாட்களும் பால் பழம் முதலியன உண்டு மூன்று வேளையிலும் பூசித்தல்வேண்டும். தேவியைக் கும்பத்திலோ (குடம்) அல்லது பிம்பத்திலோ (உருவம்) மந்த்ரம், பாவனை முதலியவற்றால் விதிப்படி ஆவாகனம்செய்து இவ்விரதத்தை இயன்றமட்டும் சிரத்தையுடன் மேற்கொள்ளுகிறேன் என்று சங்கற்பம்செய்துகொண்டு நவராத்திரிபூசையைத் தொடங்கவேண்டும். முதல் மூன்றுநாள் தேவியை வீரங் கொடுக்கும் துர்க்கையாகவும், அடுத்த மூன்றுநாள் செல்வங் கொடுக்கும் இலக்குமியாகவும், அதற்கடுத்த மூன்றுநாள் கல்வி கொடுக்கும் சரஸ்வதியாகவும் பாவித்துப் பூசிக்கவேண்டும்.

விஜயதசமி

கடைசி மூன்றுநாளும் சரஸ்வதிதேவியாகப் பூசிப்பதால் சரஸ்வதிபூசை என்று வழங்கப்பெறுகிறது. இந்த ஒன்பது நாட்களும் விரதங்காத்துக் கொண்டாட இயலாதவர்கள் கடைசி மூன்றுநாட்களிலாவது முறையே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி யாகப் பாவித்து ஒவ்வொருநாள் பூசிக்கவேண்டும். ஒன்ப தாவது நாள் எல்லா ஆயுதங்களையும் கொலுவில் வைத்துப் பூசிப்பதால் ஆயுதபூசை என்றும் வழங்கப்பெறும். தேவி அண்டங்களை எல்லாம் படைப்பவள் என்பதை உணர்த்தவே பொம்மைகளாலான கொலு வைத்துக் கொண்டாடப்பெறுகிறது. தொடக்க நாளாகிய பிரதமையன்று அஸ்த நட்சத்திரமும் சேர்ந்திருப்பது சிறப்புடையதாகும். பஞ்சபாண்டவர்கள் வன வாசத்திற்குச் செல்லும்போது தமது ஆயுதங்களை ஒரு வன்னி மரப்பொந்தில் வைத்துவிட்டுப் போனதாகவும் பின்னர்த் திரும்பி வந்தபொழுது அவற்றை அவர்களுள் விஜயனென்னும் அர்ச்சுனன் பூசித்து எடுத்துக்கொண்டதாகவும் பத்தாவது நாள் பேசப்படுவதால் அந்நாளை விஜயதசமி என்று கொண்டாடு கின்றனர்.

விரத பலன்

தினந்தோறும் காலையில் நீராடி நித்தியகடன்களை முடித்துக் கொண்டு தேவியைப் பூசிப்பதுடன் ஒவ்வொருநாளிலும் கன்னிப் பெண்களை (2 வயது முதல் 10 வயதுவரையுள்ள குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, உரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்ரா) தேவியின் அம்சமாகப் பாவித்துப் பூசித்து உணவு, உடை, அணிகலன் முதலியன கொடுத்துவர வேண்டுமென்று தேவீபாகவதம் முதலிய நூல்கள் கூறும். பத்தாவது நாளன்று விரதத்தைப் பூர்த்திசெய்து உணவுகொள்ள வேண்டும். இவ்விழாவினை ஆண்கள் பெண்கள் இருபாலாரும் மேற்கொள்ள வேண்டும். இம்மையிலே நல்லனவெல்லாம் கைகூடும். மறுமையில் இந்திராதி போகங்களும் கிடைக்கும். முடிவில் பேரின்பவீடும் கிட்டும். முறையாக இவ்விரதத்தை அனுட்டிக்க இயலாதவர்கள் லலிதா சகஸ்ரநாமம், சகலகலா வல்லி மாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலியவற்றைப் பாராயணம் செய்தும், செய்யக்கேட்டும் பயன் பெறலாம்.

வட திருமுல்லைவாயில் திருப்பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

திருவும்மெய்ப் பொருளுஞ் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறுமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 1

கூடிய இலயஞ் சதிபிழை யாமைக்
கொடியிடை உமையவள் காண
ஆடிய அழகா அருமறைப் பொருளே
அங்கணா எங்குற்றாய் என்று
தேடிய வானோர் சேர்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே, 2

விண்பணிந் தேத்தும் வேதியா மாதர்
வெருவிட வேழமன் றுரித்தாய்
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் தேவர்தம் அரசே
தண்பொழில் ஒற்றி மாநகர் உடையாய்
சங்கிலிக் காஎன்கண் கொண்ட
பண்பநின் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே, 3

போன்னலங் கழனிப் புதுவிரை மருவிப்
பொறிவரி வண்டிசை பாட
அந்நலங் கமலத் தவிசின்மேல் உறங்கும்
அலவன்வந் துலவிட அள்ளல்
செந்நெலங் கழனி சூழ்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய்
பாசுப தாபரஞ் சுடரே. 4

சந்தன வேருங் காரகிற் குறடும்
தண்மயிற் பீலியுங் கரியின்
தந்தமுந் தரளக் குவைகளும் பவளக்
கொடிகளுஞ் சுமந்துகொண் டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை
வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 5

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங்
கொள்கையால் மிகைபல செய்தேன்
செற்றுமீ தோடுந் திரிபுரம் எரித்த
திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 6

மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய
வார்குழல் மாமயிற் சாயல்
அணிகெழு கொங்கை அங்கயற் கண்ணார்
அருநடம் ஆடல் அருத
திணிபொழில் தழுவு திருமுல்லை வாயிற்
செல்வனே எல்லியும் பகலும்
பணியது செய்வேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 7

நம்பனே அன்று வெண்ணெய்நல் லூரில்
நாயினேன் தன்னை ஆட் கொண்ட
சம்புவே உம்ப ரார்தொழு தேத்துந்
தடங்கடல் நஞ்சுண்ட கண்டா

செம்பொன்மா ளிகைசூழ் திருமுல்லை வாயில்
தேடியான் திரிதர்வேன் கண்ட
பைம்பொனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 8

மட்டுலாம் மலர்கொண் டடியிணை வணங்கும்
மாணிதன் மேல்மதி யாதே
கட்டுவான் வந்த காலனை மாளக்
காலினுல் ஆருயிர் செகுத்த
சிட்டனே செல்வத் திருமுல்லை வாயிற்
செல்வனே செழுமறை பகர்ந்த
பட்டனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 9

சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்
டருளிய இறைவனே என்றும்
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயில்
நாதனே நரைவிடை ஏறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே. 10

விரைதரு மலர்மேல் அயனொடு மாலும்
வெருவிட நீண்டஎம் மானைத்
திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற்
செல்வனை நாவலா ரூரன்
உரைதரு மாலையோர் அஞ்சினோ டஞ்சும்
உள்குளிர்ந் தேத்தவல் லார்கள்
நரைதிரை மூப்பும் நடலையும் இன்றி
நண்ணுவர் விண்ணவர்க் கரசே. 11

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் 3—10—61 செவ்வாய்க்கிழமை அன்று வடதிருமுல்லைவாயில் தலத்திற்கு எழுந்தருளித் திருப்பதிகத்தைப் பத்துமுறை ஓதச்செய்து அர்ச்சனை ஆராதனைகள் செய்வித்தருளினார்கள்.

ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்

வரலாறு

வித்துவான்.
ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த
அருணந்தி நற்றுள் போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறை ஞான
சம்பந்தா நிழற்றுள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார்
செம்பதுமத் திருத்தாள் போற்றி.

சைவசமய ஆசாரியர்கள்:

சைவசமய ஆசாரியர்கள். சமயாசாரியர் சந்தானுசாரியர் என இருவகைப்படுவர். முன்னவர் திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்க வாசக சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் தோத்திர ரூபமாக அருளிச்செய்தவை தேவாரம் திருவாசகம் ஆகிய அருட் பாடல் களாம். இவற்றுடன் ஏனைய 23 ஆசிரியர்கள் அருளிச்செய்த அருட்பாடல்களையும் சேர்த்துப் பன்னிரு திருமுறைகளாக வகுத்தனர் ஆன்றோர். பின்னே சொல்லப்பட்டவர்கள் மெய்கண்டதேவர், அருணந்தி தேவர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆவார்கள். இவர்களுள் மெய்கண்ட தேவர் அருணந்தி தேவர். உமாபதிசிவம் ஆகிய மூவரும் சாத்திர ரூபமாகப் பதினேரு சாத்திரங்களை அருளிச்செய்துள்ளனர். இவற்றுடன் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனுர் ஒரு சாத்தி ரத்தையும் திருவதிகை மனவாசகங்கடந்தார் ஒரு சாத்திரத்தை யும் அருளிச்செய்தனர். ஆக மெய்கண்ட சாத்திரங்கள் பதினுன் காயின.

சைவ சமயாசாரியர்களுள் அறந்தரு நாவுக்கரசும், ஆலால சுந்தரும் சைவசந்தானசாரியர்களுள் மெய்கண்ட தேவரும், அருணந்தி சிவமும், மறைஞான சம்பந்தரும் அவதரித்த பெருமையுடையது நடுநாடு. இந்நாட்டிலே, சுந்தரர் தவநெறி வேண்டிப் பெற்ற தலமாகிய திருத்துறையூரிலே ஆதிசைவ மரபிலே அருணந்தி சிவனுர் அவதாரம் செய்தார். சந்தான பரம்பரை முதற் குரவரான மெய்கண்டதேவ நாயனுரின் சீடரானுர். மெய்கண்ட தேவர் அவதாரத்திற்கே காரணமாய் இருந்தவர் இவர். எப்படியெனில், திருப்பெண்ணுகடத்தில் அச்சுதகளப்பாளர் என்பவர் சிவநெறி விளக்கங் காணத் தமக்குப் பிள்ளைப் பேறின்மை குறித்து வருத்தமுற்றவராய்த் தமது குலகுருவாகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகளிடம் விண்ணப்பித்தார். சுவாமிகள் தம் ஆத்மார்த்த பூசையை முடித்துப் பண்டைக்கால வழக்கப்படி அடங்கன் முறை என வழங்கும் மூவர் தேவாரத்தில் கயிறு சார்த்திப் பார்த்தார். திருவெண்காட்டிறைவனைத் திருஞானசம்பந்த சுவாமிகள் பாடியருளிய ''கண்காட்டு நுதலானும்'' எனும் திருப்பதிகத்தில்,

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளம்நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்ற திருப்பாடல் கிடைத்தது. அதன்படி அச்சுதகளப்பாளர் ஒரு மண்டலம் திருவெண்காட்டுத் தலத்தில் தங்கி முக்குள நீராடி இறைவனை வழிபட்டு வந்தார். இறைவன் திருவருளால், அச்சுதகளப்பாளரின் அருந்தவ மனைவியார் திருவயிற்றில் மெய்கண்டதேவர் உதிக்கலானுர். இரண்டு வயது நிறைவுறுங் காலத்துத் தாய்மாமன் ஊராகிய திருவெண்ணெய்நல்லூரில் தங்கியிருந்தார். அப்பொழுது திருக்கயிலாயத்திலுள்ள நந்தியெம்பெருமான் பரம்பரையில் உபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவர் ஈராட்டைப் பிராயத்துக் குழந்தையான மெய்கண்ட தேவருக்கு ஞானேபதேசம் செய்தார். உபதேசம் பெற்ற மெய்கண்டார் சிவஞானியாய் விளங்கினுர். அங்குப் பல மாணவர்களுக்கு முப்பொருள் உண்மையினைக் கூறும் சைவ சித்தாந்த ஞானத்தை உபதேசித்து வந்தார்.

இந்நிலையில், அருணந்தி சிவம், மெய்கண்டார் தம்மை வந்து காணவில்லையே என்ற கர்வத்துடனும் இரண்டு வயது நிரம்பிய மெய்கண்டார் சைவ சித்தாந்தப் பாடம் எப்படிச் சொல்கிருர் என்பதைக் காணவேண்டுமென்னும் நோக்கத்துடனும் திருவெண்ணெய்நல்லூருக்கு எழுந்தருளினுர். அவ்வூர் மக்களனைவரும் வீடுகள்தோறும் பூர்ணகும்பமெடுத்து மங்கல வாத்தியங்களோடு தங்கள் குருவாகிய சிவாசாரியாரை எதிர் கொண்டு வரவேற்றனர். மெய்கண்டார் மாத்திரம் தமது இருக்கையிலேயே வீற்றிருந்து சித்தாந்த ஞானத்தை உபதேசித்துக்கொண்டிருந்தார். அதுகண்ட அருணந்தி சிவனுர் தாம் ஓரிடத்தில் தங்கி யிருந்துகொண்டு மெய்கண்டாரைப் பற்றி வினவினுர். அவரை அழைத்து வருமாறு தமது சீடர்களை அனுப்ப, அவர்கள் சென்று மெய்கண்டாரது சாத்திர உபதேசத்தில் ஈடுபட்டு அவரடிக்கு ஆளாகிவிட்டனர். இதை அறிந்த அருணந்தி சிவம் தாமே மெய்கண்டார் சாத்திர உபதேசம் செய்யும் திருமாளிகைக்கு எழுந்தருளினுர். அப்பொழுதும் உபதேசத்தில் ஈடுபட்டிருந்த மெய்கண்டார் இவரை வரவேற்கவில்லை. அவ்வமயம் ஆணவ மலத்தின் தன்மையைப்பற்றி உபதேசித்துக் கொண்டிருந்தார். உடனே தம்மைப் பொருட்படுத்தவில்லையே என்று எண்ணிய அருணந்திசிவம் தன் முனைப்போடு "ஆணவத்தின் சொரூபம் யாது?" என்று மெய் கண்டதேவரைக் கேட்டனர். சிவஞானமே உருவாய்த் திகழ்ந்த மெய்கண்டார் இன்முகத்தோடு அருள்நந்தியாரைத் திருவருள் நோக்கம் செய்து தமது திருவிரலால் அவரையே சுட்டிக்காட்டி ஆணவ சொரூபத்தை உணரச் செய்தார். அக்கணமே, அச் சிவஞானக் கதிரவனது அருளொளி நோக்கால் மலவிருள் அகலப்பெற்ற அருணந்தி சிவம் உண்மை உணர்ந்து மெய் கண்ட தேவரது திருவடியில் வீழ்ந்திறைஞ்சித் தமக்குச் சிவ ஞானம் நல்கவேண்டுமென்று குறையிரந்தார். அவருக்கு உடனே திருநீறு அளித்து மெய்யுணர்வு அருளிச் சிவஞான போதச் செம்பொருள் தெரித்துத் தமது நாற்பத்தொன்பது மாணவர்களுள் முதன்மாணவராகும் பேற்றைநல்கினுர். தமக்குச் செய்த இப்பெரு நன்மையை அருணந்திசிவம் தாம் இயற்றிய "சிவஞான சித்தியார் பாயிரத்துள்ளும்" "இருபா இருபஃது" என்ற சித்தாந்த நூலினுள்ளும் தமது குருநாதராகிய மெய் கண்ட தேவரை அழகு பெற வியந்து துதித்துள்ளார்.

இவர் இயற்றிய நூல்கள் இரண்டு. ஒன்று சிவஞான சித்தியார் ஆகும். இந்நூல் மெய்கண்ட சாத்திரம் பதினுன்க னுள்ளும் விரிந்த நூலாய் புறச்சமயம் மறுக்கும் பரபக்கமும், அகச்சமயம் விளக்கும் சுபக்கமுமுடையதாய்த் தாயுமானுர் முதலியோரால் பெரிதும் போற்றப் பெற்றதாய் சிவஞான போதத்திற்குச் செய்யுள் வடிவில் அமைந்த பாஷ்யமாய் உள்ள சிவஞானக் களஞ்சியமாகும். மற்ருென்று இருபா இருபஃது என்பதாகும். இதுவும் அப்பதினுன்களுள் ஒன்று இதில் தமது குருநாதரை வினவு முகத்தால் சித்தாந்த உண்மையைத் தெளி வுற விளக்கியுள்ளார். இவரது சிவஞானசித்தி நெறியினை வழி வழியாகப் போற்றிவளர்த்து வருவதே நமது தருமபுர ஆதீன மாகும்.

சில காலங்கழித்து அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் தமது மாணவர்களுள் சிறந்தவரான மறைஞான சம்பந்தருக்கு ஞானேபதேசம் செய்தருளி, சிவோகம் பாவனையால் அகண்ட பரிபூரண மெய்திய திருக்கோயில் திருத்துறையூரில் அமைந் துள்ளது. இவர் கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டில் வாழ்ந் தவர்.

இவர் இயற்றிய சிவஞான சித்தியாரின் பெருமையைக் கீழ் வரும் பாடல்களால் தெளியலாம்.

" வள்ளுவர்நூல் அன்பர்திரு வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகு சித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம். "

" சிவத்திற்குமேல் தெய்வமில்லை
சித்திக்குமேல் சாத்திரமில்லை " —பழமொழி.

" பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோ தும் " —குரு ஞானசம்பந்தர்.

" பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகஉண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாருநாள் எந்நாளோ "
—தாயுமானுர்.

ஆடைக்கலை

முதுபெரும் புலவர்

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

உயிர்களுக்கு வாழ இடமும், உண்ண உணவும் அவசியம் வேண்டும். உடுக்க ஆடை வேண்டாவோ? ஆடைவேண்டும். உயிர்கள் மிகுதியாயிருக்கின்றன. வேண்டாத உயிர்கள் குறைவு. அவற்றிற்கும் ஆடை உண்டு, அவை இயற்கை அமைப்பை உடையவை. சிறகுகளும், உரோமங்களும், சட்டைகளும், சிப்பிகளும் இயற்கை ஆடைகள். செயற்கை ஆடைகளைக் காட்டிலும் அவை அழகும், வலிமையும், நிறமும், தோற்றமும் ஆகிய பல நலங்களைக் கொண்டு விளங்குகின்றன. மீன்களுக்கு உரத்ததோலும் இல்லை. அடர்ந்தரோமமும் இல்லை. தடித்த உறையுமில்லை. போர்வையாக ஓர் ஆடையையும் அம்மீன்கள் தேடவில்லை. ஏன்? நீர்வாழ்வன அவை. நீரோ சீதோஷ்ணத்தால் அதிக வித்தியாசத்தை விரைவில் அடையாது. அதனால், மீன்களுக்குத் தட்பமும் வெப்பமும் சீக்கிரத்தில் அதிகம் மாறுபடுவதில்லை. அவற்றிற்குப் போர்வை வேண்டா. பாம்புகள் செதில்களைக்கொண்டு உடலைக் காத்துக்கொள்ளும். அவை குளிர்மிகுந்த காலத்தில் தலைகாட்டமாட்டா. குளிர் மிக்க இடத்தில் வாழவும் மாட்டா. அதனால், ஆடையைத் தேடா. பாம்புக்கு விரோதியாகிய மயிலுக்குப் போர்வை யாடையைக் கொடுத்தான் பேகன் என்னும் தமிழ் வள்ளல்.

மக்களோ, ஆடையைப்போல் உதவும் மயிர்ச் செறிவும் தோலுரப்பும் உடையவர்களாயில்லை. கொடிய வெயிலையும் கடிய குளிரையும் தாங்கிக்கொள்ளும் வகையில் இயற்கை யமைப்பும் மக்களுக்கு இல்லை. அதனால், காலமும் இடமும் நோக்க, தட்பத்திற்கும், வெப்பத்திறகும் தக்க வகையில் தம் உடம்பைக் காத்துக்கொள்ளும அவசியம் மக்களுக்கு உண்டா கின்றது. ஆகவே, மக்கள் ஆடையை வேண்டினர். வேண்டவே முதன்முதலில் கால தேசங்களுக்கு ஏற்றபடி தழைகளையும்,

மரவுரிகளையும் தோல்களையும் மானங்காத்தற்குத்தக்க அளவு ஆடையாக உடுத்துக்கொள்ளலாயினர். நாகரிகம் முதிரமுதிர உடற்காப்புக்கும் ஆடை அணியலாயினர்.

இக்காலத்திலும் எஸ்கிமோசாதியார்; கரடித்தோல் முதலிய வற்றை ஆடையாக உடுக்கின்றனர் என்றும், ஆப்பிரிக்கா வாசிகளிலும் ஆஸ்திரேலியா வாசிகளிலும் சிற்சிலர் மரவுரிகளை யும் தைத்த இலைகளையும் ஆடையாகக் கொள்கின்றனர் என்றும் அறியக்கிடக்கின்ற உண்மையால் அப்பழஞ் செய்தியை நம்பாதிருக்கமுடியாது.

யானைத்தோல் போர்வையும் புலித்தோலாடையும், புள்ளி மான் தோலும், பரமசிவன் சொத்து. அவற்றுள் யானைத் தோற் போர்வையை மக்கள் உடுத்துக்கொள்ளத் தைரிய மில்லாதவரானார்கள். காரணம் மரண பயமேயன்றி வேறில்லை. வேள்விவாய்க் கண்படுத்தும்' என்று தொடங்கும் சிந்தாமணிப் பாட்டில், ''வாரணத்தின் ஈர்உரிபோல'' என்றுள்ளதற்கு, நச்சினார்க்கினியர் ''உணர்வு இல்மாக்கள், தமக்கு நன்மையைத் தரும் என்று போர்த்த யானையின் பசுந்தோல் தம் உயிர்க்குக் கேடாயினாற்போல'' என்றும், ''யானையின் பசுந்தோல் பிறர் உடம்பிற்பட்டால் கொல்லும் என்று உணர்க'' என்றும் உரைத்த வற்றை இங்கு அறிதல் தக்கதாகும்.

மக்கள், ஆட்டுத்தோலை உரித்துப் போர்த்துவந்த பழக்கத் தால் உண்டான அறிவு, ஆட்டு மயிர்களைக்கொண்டு போர்வை நெய்யும் அநுபவத்தை ஆக்கியது. மரவுரியும், தழையுடையும் உடுத்த அநுபவஞானமே பருத்தியை நூற்கும் பக்குவத்தையும் அந்நூலால் ஆடை நெய்யும் ஆற்றலையும் உண்டாக்கிற்று.

சிலந்தியும் பட்டுப் புழுக்களும் ஆசிரியராயிருந்து கற்பித்த அறிவே மக்களுக்கு ஆடை வடிவாகி அழகு செய்கின்றது. வேறு பல செயற்கைப் பொருள்களும் மக்களுக்கு ஆடை யாகின்றன. ஆயினும், பழைமை மறையாதபடி நாகரிகம் மிக்க இக்காலத்திலும் விலங்கின் தோல் உடுக்கும் பழக்கம் போற்றிக் காக்கப்பட்டு வருகின்றது.

அறிஞர் திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்., அவர்கள் தமது கட்டுரை யொன்றில் எழுதியதாவது :-

''வட துருவத்தில் வாழும் ஒருவகை நரியின் தோலும் கீரியைப்போன்ற 'எர்மின்' என்னும் பிராணியின் தோலும் மயிரோடு பதனிடப்பட்டு அணியப்படுகின்றன. காட்டில் வாழும் ஒருவகை அணிலின் தோலும் உயர்ந்த ஆடையாகின்றது. இவற்றை அணிபவர் இரக்கமற்ற முருட்டு மனிதர் அல்லர். மேன்மைமிக்கவராய், கருணை நிரம்பியவராய் அன்பே உருவாகியவராய் உள்ளவர் எனக் கொண்டாடப்படும் பெண்கள் தாம் விசேஷமாக இவற்றை அணிந்து மகிழ்கின்றார்கள். அரசர்களும் நீதிபதிகளும்கூட இவற்றைத் தங்கள் பதவிக்கு அறிகுறிகளாகக் கருதிக் கௌரவிக்கின்றார்கள். கோழை மனத்தை உடையதாயும் தீங்கே செய்து அறியாததாயும் உள்ள மானினுடைய தோலும் ஒரு நற்குணமும் இன்றித் தீமையே வடிவெடுத்தாற்போன்ற பாம்பின் சட்டையும் நவநாகரிக மாதர் விரும்பியணியும் அணி (யாடை)களாகத் திகழ்கின்றன. ஆட்டின் மயிரையும், அல்பாக்காவின் மயிரையும் ஒட்டகையின் மயிரையும் நூலாக நூற்று, நெய்து, பட்டைக்காட்டிலும் மிருதுவாயும் அழகாயும் உள்ள ஆடைகளைத் தயாரித்து அணிகிறார்கள். மதகுருக்களும் புலவர்களும் விரும்பி அணியும் சால்வைகள் மதிகெட்ட ஆட்டின் மயிரால் செய்யப்பட்டனவே'. இதனால், ஆடைக்கலையின் வளர்ச்சியும், மக்கள் தந்நலமும், பிறவுயிர்களின் அழித்தற்பாடும் வெளிப்படுகின்றன.

காஷாய ஆடை தரிப்பதும், அதன் உயர்ச்சியும், சடைக் கற்றையைக் காவியாடையால் மூடி முறுக்கி முடிப்பது போலும் பழக்கமும் முற்காலத்தில் இருந்தன. அவை இன்று தோன்றியன அல்ல. 'கல்லுண்கலிங்கம்', 'கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் முக்கோல் அசைநிலை கடுப்ப', 'துகிலைக் காவிரிக் கல்லைத் தோய்த்து உடுத்த விரதங்களையுடைய முக்கோலந் தணன்.' (முல்லைப் - 37-1). உடுத்தாள் கல்தோய் நுண் கலிங்கம் உரவோன் சிறுவன் உயர்கென்க என்றதால், காவி ஆடை உடுத்தால் உண்டாகும் உயர்வு குறிக்கப்பட்டமை காண்க.

பசும்பொன் போர்வை; பொன்புனையுடுக்கை (பீதாம்பரம்) ஏகவுத்தரியம்; நார் நூல் வெண்டுகில், கஞ்சுகம், பூங்கச்சு, ஒலியல், கட்டளையிழையாப் பட்டுடை, மங்கலப்பட்டுடை, பட்டுடைத் தனித்தாழ், மேகலை, கலாபம், காஞ்சி, பருமம், விரிசிகை முதலியவை மக்கள் உபயோகத்தில் இருந்தவை.

அரையில் உடுத்தற்குரியது 'ஆடை' என்றும் மேலே போர்த்தற்குரியது 'போர்வை' என்றும் வழங்கப்பட்ட உண்மை.

"பேரானை ஈர்உரிவைப் போர்வை யானைப்
புலியதளே உடை ஆடை போற்றி னானை"

என்னுந் திருத்தாண்டகத்தின் திருவடியால் விளங்குகின்றது.

மேகலை, காஞ்சி முதலியவற்றின் கோவைக்கணக்கு வேறு பாட்டைத் திருமுருகாற்றுப்படை, கலித்தொகை 56. உரையா லறியலாம். விரிசிகையின் கோவையல்லாத மற்றை நான்கும் கோவைக்கணக்கில் வேறுபட உரைத்தனர் முன்னோர். மேகலை: 7-8; காஞ்சி: 8-2; கலாபம்: 16-21; பருமம்: 18-14; விரிசிகை: 32-32 என்று பழம் பாட்டுக்கள் இருவேறாக உணர்த்துகின்றன. இருகோவை முதல் முப்பத்திருகோவை ஈறாக ஒன்றற்கொன்று வடம் ஏறுதலான் மேகலையை 'ஏணிப் படுகால்' 'ஏணிப்படிகால்' என்றார் பரிபாடலுரையாசிரியர்.

'முரண்கோள் உருவின் இரண்டு உடன் உடீஇ' என்றதால் ஈராடையும் மாறுபட்ட நிறமுடையனவாக உடுத்தல் உண்டென்று தெரிகின்றது. உலராத ஆடையை உலர உடுத்தலும் உண்டு. (புலராக்காழகம் புலர உடீஇ) மேலாடை தோளிலே கிடந்து அசைய உடுத்தலை 'ஒலியல் புரளுந்தானை' என்ற மதுரைக் காஞ்சித் தொடரால் அறியலாம். புணர்ச்சிக் காலத்திற்பட்டு உடுத்திருந்தவர் வெள்ளாடை உடுத்துக்கொள்ளும் பழக்கத்தை, 'பட்டுநீக்கித் துகிலுடுத்து' என்றதற்கு நச்சினார்க்கினியர் உரைத்ததாலறியலாம். திருமால் கரிய மேனியில் செய்ய பொன்னுடை விளங்குவதை 'மாஅ மெய்யொடு முரணிய வுடுக்கை' என்று குறித்தார் ஒருவர்.

(தொடரும்)

புறத்தில் கூன்

வித்துவான். திரு. வை. மு. இராமகிருட்டினன்.

" அசை கூன் ஆகும் அவ்வயின் ஆன " (தொல். செய். 46.) " சீர் கூன் ஆதல் நேரடிக் குறித்தே " (தொல். செய். 47.) என்னும் இருநூற்பாக்களாலும் கூனைப்பற்றிய விதியைச் சிறிது அறியமுடிகிறது. இதுதவிர சங்கநூல்களில் தலைசிறந்த புறநானூற்றுப் பாக்களில் காணப்பெறும் கூன்களை அடிப்படையாகக் கொண்டு வேறு சில உண்மைகளையும் நாம் அறியலாம். இதன்பொருட்டு புறநானூற்றிலுள்ள பாக்கள் யாவும் இங்கு ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. புறநானூறு அனைத்திலுமாக 89 கூன்களே காணப்படுகின்றன. ஒவ்வொருவகைப் பாக்களிலும் எவ்வளவு கூன்கள் வந்துள்ளன என்பது அறியத்தக்கது. வஞ்சியடிகள் மிக்கு வந்த பாக்கள் பதினன்கு புறநானூற்றில் உள. இவற்றுள், பத்துப் பாக்களில் மட்டும் 25 கூன்கள் வந்துள்ளன: இவை அமைந்துள்ள முறையாவது :- 6, 2, 5, 1, 1, 1, 3, 4, 1, 1=25. வஞ்சி மிக்க பாக்களில் ஒன்று வீதம் ஐந்து பாக்களும்; 2, 3, 4, 5, 6 கூன்கள் ஒவ்வொரு பாட்டிலுமாக அமைந்துள்ளன.

ஆசிரிய அடி மிகுந்து வந்தனவாக இருபத்தொன்பது பாக்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. இவற்றுள் ஏழு பாக்களில் பதினொன்று கூன்களே அமைந்துள்ளன. அவை அமைந்துள்ள முறை :- 1, 2, 2, 1, 1, 3, 1=11. மூன்று கூன்கள் வந்துள்ள பா, இவ்வகையில் ஒன்றே. இணைக்குறள் ஆசிரியப்பா புறநானூற்றில் ஆறு காணப்படுகின்றன. இவற்றுள் மூன்று பாக்களில், நான்கு கூன்கள் முறையே 2, 1, 1 ஆக வந்துள்ளன. நிலைமண்டில ஆசிரியப்பா புறநானூற்றில் பதிமூன்று பாக்கள் உள்ளன. இவற்றுள் ஒவ்வொன்றுவீதம், இரண்டு பாக்களில் இரண்டே கூன்கள்தாம் வந்துள்ளன. நேரிசை ஆசிரியப்பா, புறநானூற்றில் 334 பாக்கள் உள்ளன. இவற்றுள் கூன்களைப்பெற்று விளங்குவன 33 பாக்கள்தாம். இப்பாக்களில் வந்துள்ள கூன்கள் மொத்தம் 47 ஆகும்.

கூன் அசையாகவும், சீராகவும் வரப்பெறும் எனத் தோல் காப்பியம் (அசைகூன். தோல்-செய். 46, சீர்கூன். தோல்-செய். 47) பொதுப்படையாகக் குறிக்கிறது. இருப்பினும், புறநானூற்றி லுள்ள 89 கூன்களையும் நோக்குமிடத்து அவற்றை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை :- 1. ஓரசைக்கூன். 2. ஈரசைக்கூன். 3. மூவசைக்கூன். இவற்றுள் ஈரசைக்கூன் களே செய்யுட்களில் மிகுதியாக வந்துள்ளன. அடுத்தபடியாக ஓரசைக்கூன்கள் வந்துள்ளன. மூவசைக்கூன்கள் மிகக் குறுகியே காணப்படுகின்றன.

ஓரசைக்கூன்

புறநானூற்றிலுள்ள 89 கூன்களுள் ஓரசைக்கூன்களாக விளங்குவன 14. இந்த ஓரசைக் கூன்களை, அவை அமைந் துள்ள தன்மைகளை நோக்கி இருகூறுக்கலாம். அவை :- 1. பொருட்பெயரைச் சுட்டிவந்த ஓரசைக்கூன்கள் 9. 2. ஆட் பெயரைச் சுட்டிவந்த ஓரசைக்கூன்கள் 5. இவ்விரு பிரிவு களில் பொருட்பெயரைச் சுட்டிவந்த ஓரசைக்கூன்களே மிகுதி.

I. பொருட்பெயரைச் சுட்டிவந்த ஓரசைக்கூன்களும், அவைவந்துள்ள பாடல்களும் வருமாறு :- 1. வாள் (புறம்-4.) 2. தாள் (புறம்-4.) 3. தோல் (புறம்-4.) 4. களிறு (புறம்-4.) 5. என (புறம்-55.) 6. கனி (புறம்-235. 7. துறை (புறம்-345.) 8. தெருவு (புறம்-345.) 9. வழி (புறம்-345.)

II. ஆட்பெயரைச் சுட்டிய ஓரசைக் கூன்களும், அவை வந்துள்ள பாடல்களும் வருமாறு :- 1. நீ (புறம்-38, 38.) (இருமுறை.) 2. பிறர் (புறம்-141, 383.) (இருமுறை.) 3. அவர் (புறம்-199.)

ஈரசைக்கூன்

புறநானூற்றில் 72 ஈரசைக்கூன்கள் உள்ளன. இவற்றுள் ஆட்பெயரின் அடியாகவந்தன 23. பொருட்பெயரின் அடியாக வந்தன 49 ஆகும். ஆக, இதனுனும் பொருட்பெயரின் அடியா கவே பெரும்பாலும் கூன்கள் அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

I. ஆட்பெயரின் அடியாகத்தோன்றிய ஈரசைக்கூன்களும், அவை வந்துள்ள பாடல்களும் வருமாறு :- 1. நீயே (புறம்-4, 40, 42, 46, 57, 58, 98, 137, 167, 201.)=(10 இடங்களில்) 2. நின்னொடு (புறம்-24, 25.) 3. யாமே (புறம்-84.) 4. யானே (புறம்-200.) 5. இவரே (புறம்-46, 200.) 6. அவரே (புறம்-167.) 7. என்னை (புறம்-84.) 8. யானும் (புறம்-154, 394, 382) 9. நினதே (புறம்-382.) 10. கடையோர் (புறம்-225.) இவற்றுள் 'நீயே' என்னும் முன்னிலைப்பெயரே மிக்குவந்துள்ளமையால், ஒருகாலத்தில் விளியின் பொருட்டே கூன் பயன்படுத்தப்பட்டுள்ளது என்னும் உண்மையை உணரலாம்.

II பொருட் பெயரைச் சுட்டிய ஈரசைக்கூன்களும், அவை வந்துள்ள பாடல்களும் வருமாறு :-

1. மாவே (புறம் - 4, 97). 2. கீழது (புறம் - 6). 3. ஆங்க (புறம் - 6, 29, 25). 4. எனவாங் (புறம் - 11). 5. ஆஅங் (புறம் - 136). 6. யாங்கப் (புறம் - 396). 7. அதனால் (புறம் - 28, 45, 55, 58, 167, 186, 213, 213, 214, 217, 366) = 11 முறை. 8. பெருமரத் (புறம் - 41). 9. இவ்வே (புறம் - 95). 10. வேலே (புறம் - 97). 11. களிறே (புறம் - 13; 97). 12. ஆயிடை (புறம் - 97). 13. ஒன்றே (புறம் - 109). 14. ஒருநாள் (புறம் - 376). 15. இரண்டே (புறம் - 109). 16. மூன்றே (புறம் - 109). 17. நான்கே (புறம் - 109). 18. நீலத் (புறம் - 111). 19. எரிதே (புறம் - 382). 20. அதன்கண் (புறம் - 229). 21. அதுகண்டு (புறம் - 285). 22. இனியே (புறம் - 248). 23. இன்றும் (புறம் - 219). 24. காஅ (புறம் - 345). 25. சிறுதனி (புறம் - 381). 26. புறவே (புறம் - 386). 27. கடலே (புறம் - 386). 28. சுழியே (புறம் - 386). 29. வயலே (புறம் - 386). 30. ஆங்கவை (புறம் - 387). 31. என்றுங் (புறம் - 166). இவைகளுள் 'அதனால்' என்னும் சொல்லே மிகுதியாக வந்து மிகுதியான கூன்களை அளித்துள்ளன.

மூவசைக்கூன்

மூவசைக் கூன்கள் செய்யுட்களில் அருகியே வருகின்றன. புறநானூறு முழுதிலுமாக இரண்டே இரண்டு மூவசைக்

கூன்கள்தாம் உள. இவையிரண்டும் ஆட்பெயரைச் சுட்டி யனவே. இவையும், இவை வந்துள்ள பாடல்களும் வருமாறு:- 1. யாமே நின் (புறம் - 40). 2. அவன்ருனும் (புறம் - 97).

பிற்காலச் செய்யுட்களில் பாவிலுள்ள ஓர்அடியின் இறுதிச் சீரில்தான் கூன் வருவது வழக்கமாக உள்ளது. ஆனால் புற நானூற்றில் ஓர்அடியின் முதற்சீரோ அல்லது இடைச்சீரோ அல்லது கடைச்சீரோ கூனுக நின்றமைக்குச் சான்றுகள் உள. ஓர்அடியின் முதற்சீர் கூனுக விளங்கியமைக்கு ஓர் எடுத்துக் காட்டு. " இவரே........ " (புறம் - 46) இடைச்சீர் கூனுக நின்றமைக்கு ஒரு சான்று. " ......யானும்...... " (புறம்-154) இறுதிச்சீர் கூனுக நின்றமைக்கும் ஒரு சான்று. " ......பிறர் " (புறம் - 141). முடிவாக புறநானூற்றுக் கூன்களில் நாம் அறியும் உண்மைகளாவன :-

1. வஞ்சியடிகளிலேயே கூன்கள் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

2. நேரிசையாசிரியப்பாக்களில்தாம் குறைவாகக் கூன்கள் அமைந்துள்ளன.

3. கூன்கள் யாவும் பொருட் பெயர்களையோ அல்லது ஆட்பெயர்களையோ சுட்டியே வந்துள்ளன.

4. ஆட்பெயர்களைவிட, பொருட் பெயர்களைச் சுட்டியே கூன்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

5. முன்னிலை விளியின் அடிப்படையில் தோன்றும் பெயர் களே ஆட்பெயர் கூன்களுள் மிகுதியாகும்.

6. வாக்கியக் கோழுச்சொற்கள் (அதனுல், ஆகவே என்பன) பல கூனுக விளங்கியுள்ளன.

7. மூவசைக் கூன்கள், ஆட்பெயரின் அடிப்படையிலேயே வந்துள்ளன.

8. கூன் ஓர் அடியில் எவ்விடத்திலேனும் அமையலாம்.

9. ஒரே பாட்டில் ஆறு கூன்கள்கூட பயன்படுத்தப் படுதல் உண்டு.

10. ஈரசைக்கூன்களே ஏனைய கூன்களைவிட மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன.

திருவுந்தியார்

திரு. த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை.

(மலர் 20, இதழ் 10, பக்கம் 609 இன் தொடர்ச்சி)

ஆன்மாவுடன் கூடி ஆன்மாவாய் நின்றும், தன்னிலையின் உண்மை குன்ருமல் பரமானந்த சொருபமாய் நிற்கும் அப்பரம் பொருளை அத்துவிதமாக அறிந்து தியானித்தல் வேண்டும். அந்தச் சொருபம் அநாதியே தன்னைத் தோற்றுவியாமல் ஆன்மாவாய் நின்ற முறைபோல ஆன்மாவும் தன்னைத் தோற்றுவியாமல் அந்தச் சொருபமாகியே நிற்றல்கூடுமாயின் அப்பொழுதே பரிபூரண பரமானந்த சொருபம் கைகூடும்.

கீழான பொய் மாயங்களான சுக துக்கங்களிலே பட்டுப் பிறப்பு இறப்புக்களை அடையாமல் உண்மையை உணர்த்திப் பரப்பிரகாசமான பரமாகாச ஒளியிலே விழித்துப் பரபோகத்தில் அழுந்தி அநுபவிக்கும்படி கூட்டுவித்த ஞானுசாரியர் அளவிடப் படாத பெருமையையுடையவர். செயற்கரிய தவத்திலே நின்று வழிபடும் ஆன்மாக்களுக்கு வேண்டியவற்றை வேண்டியாங்கு நல்கவல்ல பரம்பொருளுமாவார்.

ஆன்மாவை அநாதியே பொருந்தியுள்ள அருளாகிய சிவ சத்தியைக் காருணியத்தாலே ஆசாரியன் விளங்குமாறு செய்ய அந்தச் சிவஞானத்துடனே கூடி அந்தமயமாகவே நிற்கின் சிவம் அதனையறிந்து கூடுவன்.

சிவஞானம் ஒன்றே மலமாயாகன்மங்களைப் போக்கவல்லது. சிவஞானமும் ஆசாரியனுடைய கருணையால் பெறப்படும். அது வேருென்ருலும் பெறப்படுவதன்று. சிவஞானமே கண்ணுகக் கொண்டு அந்தமயமாய் நிற்கப்பெறின் அப்பொழுதே ஞான மயமாய் நிற்கின்ருேம் என்ற பற்றும் அறச்சிவமாந்தன்மைப் பெருவாழ்வைக் கொடுத்தருளுவன் இறைவன் என்க. இதனை யன்றிச் சிவனைத் தியானித்துக் கூடுவோமெனக் கருதில் ஒருக் காலும் கூடப்பெறுன்.

உணர்த்தும் முறைமையினும் அவத்தையினும் அழுந்தாமல் சிவஞானத்தால் சிவனைத் தரிசித்திருக்கும் சிவயோகிகளுக்குப் பிராரத்தகன்மம் கூடினாலும் திருவருளே கண்ணாகக் கொண்டு நிற்றலால் ஒன்றினும் தாக்குண்ணமாட்டார்கள். அது எதுபோல என்னில், தாழ்ந்து தொங்கும் நாவினையுடைய மணி அசைவும் ஆரவாரமும் அற்றிருப்பதுபோல என்க.

அரசகுமாரன் மாறுகொண்ட பகைவனை வென்று தன் இருக்கை சேருமளவில் அரச வாத்தியங்கள் முழக்கத்துடன் எதிர்கொள்ளும். அதுபோல திருவருளே துணையாகக் கருவி கரணங்களின் ஆரவாரத்தை அடக்கி வெற்றிகொண்டு திருவடியைச் சேருங்காலத்து அனவரதமும் பரமானந்த நிருத்தம் பண்ணும் இறைவர் திருவடிக்குச் சிலம்பும் ஓசையுமான பரவிந்து பரநாதம் அடியார் பிறவித்துயர் கெட ஆரவாரிக்கும். ஆதலின், அப்பரநாதமே வழியாகச்சென்று தற்போதங்கெட வழிபடுதல் வேண்டும்.

சிவஞானமும் சிவானந்தமுமே நன்கு விளங்கப்பெறும் பரமாகாசத்திலே கூடிப் பொருந்திநின்று அநுபவிக்கவேண்டும். அதனை உணர்ந்தகாலத்து மாயையும் ஒடுங்கியகாலத்து ஆணவமும் கூடாது. இந்த நிலையை ஞானசாரியன் அநுக்கிரகத்தால் அறிந்தவிடத்து பின்பு அநுபவிப்போம் என்று பொய்ப் பொருளாகிய உலகம் உடம்பு மனம் முதலிய கருவிகளில் அழுந்திப் பிறவி கூடாமல் பரமானந்தத்தில் கூடிநின்று இளைப்பாறும்படி விரைந்து செய்யக்கடவர்.

மாயா கருவிகளால் உரைக்கத்தக்க உருவப்பொருளும், வாக்கால் சொல்லமுடியாத முயற்கோடுபோன்று இல்லாத பொருளும் அன்றி, வாக்கு மனங்களுக்கு எட்டாத பூரணப் பொருளாகிய அது திருவருட்சத்திக்குச் சத்தனாகிய சிவன் என அறிக. உள்ளது இல்லது என்னும் பொருள்கள் எல்லாம் ஆன்மபோதத்தால் அறியத்தக்கன. இப் பரம்பொருள் சிவஞானத்தாலேயே அறியத்தக்கதாம்.

பரம்பொருளைக் கூடி அநுபவித்தற்கு மேலே கூறியமுறை கைவராதாயின் ஆசாரியனுடைய அநுக்கிரகத்தால் சிவயோகத்தை முயன்றுநின்று சாதித்துத் திருவடியைக் கூடுதல்

வேண்டும். அவ்வாறின்றி வேறு முறைகள் எதனுலும் கூடத் தக்கதன்ரும்.

இனி, களவுசெய்தலின் வல்லான் ஒருவன் தன் உருத் தெரியாதபடி பேதிப்பன். களவுநூலில் விதித்தபடி மிக்க பொருளுடையானை மந்திரத்தானும் மருந்தானும் தியானத்தானும் பேதித்துத் தன்வசம் செய்வான். அவனிடத்துள்ள பொருள்கள் எல்லாவற்றையும் தனதாக்கிக்கொள்வான். அதுபோல சிவனும் ஆன்மாவின் அநாதிமல சம்பந்தத்தால் ஆன்மாவுக்குத் தெரியாதபடி ஒளித்திருப்பன். அவ்வாறு ஒளித்திருந்து உப கரித்துக் கன்மஒப்பையும் மலபரிபாகத்தையும் உண்டுபண்ணு வன். அப்போது அவனுக்குப் பொருந்தினதொரு திருமேனியில் பிரகாசித்திருந்து திருநீறு என்னும் மருந்தாலும், திருவைந் தெழுத்து என்னும் மந்திரத்தாலும், சொருப தியானத்தாலும் ஆன்மாவைப் பேதிப்பன். தன் வசத்திலாக்குவன். சஞ்சிதமாக நெடுங்காலம் தேடிவைத்துள்ள பொருள்களை அத்துவாக்கள் என்னும் அறைகளையெல்லாம் சோதித்தெடுப்பன். தேகமாகிய இல்லத்தையுடைய ஆன்மாவும் அவன்வழி நிற்றலால் ஒரு முதலும் இல்லையாய்த் தொலையும். இவன் இதயமும் வெளி யாய்ப் பரமாகாசமாம். அக்காலத்து ஐம்புல வேடராகிய கள்வரால் அகப்படுத்தமுடியாதிருந்த வீடும் எளிதாகக் கிடைக்கும்.

அட்டமூர்த்திகளும் திருமேனியாகக்கொண்ட சிவபெருமான் திருவருளால் அநாதிகாலந்தொட்டே தம்மைவிட்டு நீங்கப் பெருத பரம்பொருளை அறிந்து கூடப்பெற்றவர்கள் பிராரத்தத் துக்கு ஈடாக உடம்பு உலகம் முதலியவற்றில் கூடிநிற்பினும் அதில் அழுந்தப்பெருர். இவ்வாறு திருவருளால் உலகம் முதலியவற்றைப் பொய்யென்று கண்டு நீங்கி நிற்கப்பெறின் ஒருக்காலும் அழிவில்லாததிருவடியே அவர்கட்குப் புகலிடமாம்.

திருவருளால் ஆன்மாக்கள் பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெற்றவிடத்துப் பசு கரணங்களெல்லாம் சிவகரணங்களாம். இந்தச் சிவஞானச் செல்வம் பெற்ருரே புண்ணிய பாவம் துலையொத்த ஆன்மாக்களாம்.

ஞாஞசாரியனுடைய திருவருளால் தேகாதிப்பிரபஞ்சங்களை உணர்ந்து நீங்கின தன்னையும், தரிசிப்பித்த சொருபத்தையும் திருவருளே கண்ணுகக் கொண்டு உணர்ந்து தன்மை முன்னிலை

படர்க்கையாய் உள்ள உணர்வும் கெட்டால் சிவானுபவம் கைவரப்பெற்றுச் சுவானுபவமாம். இந்நிலை கைவந்தபின் பிறப் பிறப்புக்களை உண்டுபண்ணும் பாச விகற்பங்கள் உளவாகா.

இப்படி ஞானாசிரியன் திருவருளால் ஐயமறப் பெற்றுள்ள சிவஞானமே கண்ணாக முத்திக்குவித்தாகவுள்ள பரம்பொருளின் அருட்குணங்களை யறிந்து அநுபவிக்கும் ஞானச்செல்வர்களே மீட்டும் பிறப்பு இறப்புக்களில் பட்டுழலாமல் பரமானந்த சொருபத்திலே கூடிநின்று வாழ்வார்கள்.

ஆன்மபோதத்தால் உணர்ந்து வாக்குகளால் சொல்ல முடியாத அப்பரம்பொருள் ஆசாரியனுடைய அநுக்கிரகத்தால் சிவஞானத்தைப் பெற்று உணரத்தக்கதாம். அன்றி, யான் எனது என்னும் செருக்குடையாரால் சேரத்தக்கதன்று.

எல்லாம் 'சிவச்செயலே' எனத் தெளிந்து உண்மையை உணர்ந்துநிற்றலொன்றே வீடுபேற்றைத் தரவல்லதாம். இதனை ஞானாசாரியனுடைய திருவருளாலேயே பெறுதல் அன்றி வேறொன்றானும் பெறுதல் கூடாது. இதற்குத் தக்கன் செய்த வேள்வியும், சண்டேசுவர நாயனார் தந்தைதாள் தடிந்தமையும் சான்றாம். தன்செயலெனத் தக்கன் வேள்வி செய்தான். தன் செயலற நின்று தாதைதாள் தடிந்தார் சண்டேசர். இரண்டற நின்று அநுபவிக்கும் நிலை சித்தாந்த சைவத்திற் கூறப்படுவ தாம். ஏனைய சமயங்கள் யாவும் பயன்பெறுங்காலத்தில் சாவி போலப் பயனின்றி ஒழிவன. ஆகலின், சித்தாந்த சைவமே முடிந்த முடிபாம்.

நிலம் முதல் நாதம் ஈறாகவுள்ள தத்துவங்களையும் பஞ்ச மலங்களையும் திருவருளால் கண்டு நீங்கித், தன்னைத் தரிசித்து அதனையும் பொருளன்று எனத் தள்ளி, திருவடியிலே பொருந்தி நிற்கும் மெய்யடியார்களுக்குப்பிராரத்தகன்மத்தால் சாக்கிரநிலை கூடினாலும் துரியாதீதநிலையான ஞானமே பிரகாசிக்கும். ஒரு காலத்தும் அவர் பிரபஞ்சத்துடன் கூடமாட்டார். இவரே 'பரஞானத்தால் பரத்தைத்தரிசித்தோர், பதார்த்தங்கள் பாரார்' என்க.

பிராரத்தகன்மம் புசித்தாலன்றித் தொலையாது. பிராரத்தம் அநுபவிக்குமிடத்துக் கருவிகரணங்களுடன் கூடிநின்றே

புசித்தல்வேண்டும். அவை கூடினுலும் அவற்றில் அழுந்தலாகாது. சுகதுக்கங்களையும் கன்மத்தையும் கருவிகரணங்களையும் தன்னையும் கூட்டிப் புசிப்பிக்கின் திருவருளை அத்திருவருளே கண்ணுகக்கொண்டு உணரவே சனனம் ஏருது, கன்மமும் தொலையும் ;. பெற்ற சிற்றின்பமும் பேரின்பமாம். இப்படிநிற்க மலம் மாயை கன்மங்கள் சேட்டியா.

சுகதுக்கங்கள் இரண்டும் வந்து கூடாமல் சிவனடியைச் சேர்ந்த காலத்தே அளவிடுதற்கரியதாக விளைந்த அநுபவம் பரமானந்தமாகிய பிரமசத்தியைக் கூடியபொழுது ஒரு தன்மையான சுகசொரூபமாம். அசத்தியத்தைச் சத்தியமாகக்கொண்டு ஒழுகிய ஆன்மாவையும் அப்பரம்பொருள்மேலான ஞானனந்தத்திலே சேர்த்து அடிமைகொண்டது பெருவியப்பாம்

பேயினுல் பிடியுண்ட ஒரு பெண் தன் சொரூபம் வேருகாமலிருந்து மனமும் வாக்கும் செயலும் பேயின்வசத்ததாய்த் தன்னை மறந்து பேய் என நிற்பாள். அதுபோல, சிவத்தால் பிடியுண்ட ஆன்மா சிவத்தால் விழுங்கப்பட்டு எண்குணங்களும் பதியச் சிவமேயாய் நிற்பர்.

மூலாதாரத்தில் பதிந்துகிடக்கும் பிரணவசொரூபத்தை ஞானுசாரியன் அநுக்கிரகத்தால் அறிந்து சத்திபீசத்தையும் சவபீசத்தையும் பிராசாதமாக்கிச் சுழுமுனைவழியே செலுத்திப் பிரமரந்திரத்திலே கூடித் தான் பரமாகாசத்தில் அழுந்தில் சாயுச்சியநிலை கூடும் இதுவே சிவத்தைக் கூடுமிடம் என்க.

உடம்பு கூடியபடியும், உடம்புடன் தான்நிற்கும் முறையும், கன்மங்கள் வந்து கூடும் முறையும், தற்போதம் கரணம் முதலியவற்றுடன் கூடிச் சலித்த முறையும், சிவசந்நிதியில் கூடிச் சீவிக்கும் முறையும் திருவருளாற் கண்டு செயலறநிற்கப் பெறின் பிராரத்தம் தொலையும். ஆகாமியமும் ஏருது ; தேகாந்தத்திலே திருவடியிலே கூடுதற்குக் காரணமாம். இவ்வாறின்றித் தற்போதத்தால் அறியத்தக்கது என்று பாவிக்கில் இறப்புப் பிறப்புக்கள் நீங்கமாட்டா.

பொன்னுல் செய்யப்பட்ட கொழுவைக்கொண்டு வரகு விளைக்க உழுவார் யாவருமில்லை. அவ்வாறு உழுவாராயின் பலன் குறையும், மிக்க சேதமும் ஆம், உழவும் வீணும். அது போல, ஞானுசாரியனுல் பெற்ற திருவருளைக்கொண்டு பிழையே

பெருக்கித் திரியாமல், முன்பு திருவருள் மறைந்துநின்று உபக ரித்த முறைமை அறிந்து அதுவே கண்ணாக அதில்கூடி அழுந் தினால் ஒருகாலத்தும் நீங்காத பரமானந்தம் விளையும் என்பதனை யும் அறிந்து தன் செயலற அதுவாய் நிற்பதே நிலை. இப்பரம் பொருளை உணராதே உணர்ந்துநிற்க வேண்டும்.

ஆன்மபாவனையை விட்டுச் சிவபாவனையில் அழுந்திநின்று அநுபவித்தலை ஒருகாலத்தும் விடலாகாது.

சிவபரம்பொருள் தன்னுடைய கருணையாலே ஆன்மாவாகி யும் சிவனாகியும் நிற்கவல்லார். சிவன் ஆன்மாவாகின்றாரல்லர், ஆன்மா ஆணவத்திலே அழுந்துமிடத்துப் பின்நின்றும் சிவத் திலே அழுந்துமிடத்து முன்நின்றும் அருளுவன். ஆன்மா சிவன் திருவடியிலே கூடிப் பரமானந்தத்தை அநுபவிக்கும். ஆயினும் சிவன் செய்யும் ஐந்தொழில் நடாத்துதல் என்றுமில்லை. ஆன்மா என்றும் தன் உண்மை குன்றாமல் கூடின ஒன்றிலே அததுவாய் நிற்றலையுடையன்.

ஞானாசாரியன் திருவருளால் பெற்ற அருளாகியவாளா யுதத்தைக்கொண்டு ஆணவமலவேரை அறுத்து முத்தியாகிய கனியைச் சுவைத்துப் பரமானந்தத்தை அநுபவித்துச் சிவ னுடனே ஒன்றாகிநிற்றலே பெறும் பயனாம்.

பூரணப்பொருளாகிய சிவம் குருதிருமேனிதாங்கித் திருவடி சூட்டி உண்மை நிலையை உணர்த்தி ஒருநெறியில் நிலைபெற வைத்த கருணையை என்றும் மறவாமல் போற்றுவதே ஆன்மா வின் கடப்பாடாம் என்க.

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்

கல்லா ருக்குங் கடைப் பட்டோர் கற்றும் மடங்காத நெஞ்சர்
இல்லா ருக்குங் கடைப் பட்டோ ரிருந்துமோன் றீகை யில்லார்
நல்லா ருக்குங் கடைப் பட்டோ ரமர்க்கஞ்சி நைந் தோளிப்போர்
எல்லா ருக்குங் கடைப் பட்டோர் கண்ணோட்ட மிலாதவரே. 91

மருத நாட்டு மங்கை

செஞ்சோற்கொண்டல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் B. A.

(மலர் 20, இதழ் 10, பக்கம் 591 இன் தொடர்ச்சி)

'பெற்றவர்கள் அறியாமல் எத்த னைநாள்
பிணைந்திருத்தல் கூடும்நாம்? அத்தான்! நன்கு
முற்றவறிந் திடுநமக்கு மொழிவ தேனோ?
முட்டின்றி நமதுளத்தை வெளிப்ப டுத்திக்
கற்றபெரி யோர்முன்னே கரணங் கூடிக்
கைப்பிடித்த லன்றோநன் முறையும் ஆகும்?
முற்றவத்தாற் கூடிநின்றோம்; கற்பு வாய்த்து
முன்னவர்க்கும் பன்னயங்கள் புரிவ தென்நாள்?' 49

தேன்பொழிந்த தைப்போலே வஞ்சி சொன்ன
தென்றமிழைக் கேட்டபின்னர்க் காளை சொல்வான் :-
'வான்பொழிந்த நிலம்போலே மகிழ்ந்தேன் அன்பே!
வாய்க்குமன்றோ காலநமக் கின்றே; ஆயின்
நான்சுமக்கும் படைப்பொறுப்புச் சிறிய தாமோ?
நலங்கெடுக்க நினைக்கின்ற மாற்றார் தம்மை
வான்புகுத்தி வாளோடு வெற்றி யாடல்
வாகைமுடித் திடவெனக்கு வாய்த்த பின்னே. 50

உனைக்கொள்வேன் மணத்தாலே; உறுதி!' என்றான்;
ஒளிபிறந்த தவன்கண்ணில்; நிலவில் கண்டாள்;
'நினைக்கணமும் பிரிந்தறியேன்; நெஞ்சினுள்ளே
நிலைத்துவிட்டாய்; கனிமொழியே! உன்னை எண்ணில்
வினைக்குறிக்கும் செயல்மறப்பேன்; ஆண்மை வீரம்
பேச்சவையும் நினதழகு விழியே காண்பேன்;
உனைக்குறித்தே நினைந்திருப்பேன்' என்றான் பின்னும்;
ஓர்நொடியில் அவன்கருத்தை உணர்ந்தாள் பூவை. 51

‘ அத்தான் ! நும் வாய்மொழியிற் பெருமை கொள்வேன்
ஆயிடினும், கடமைதனை மறந்தி டாது
சொத்தான தாய்நாட்டு வீரம் பேணச்
சூழ்ச்சிதனை முறியடிக்க, மறத்தாற் சாட,
முத்தான தமிழ்ப்பண்பு நெறியை ஓம்ப,
முடுகிவரும் மாற்றாரைத் தூள்தூ ளாக்க
எத்தாலும் குறையாது போரிட் டோங்கி
இன்புறுவீர் ! எனைமறப்பீர் ; அதன்பின் னேநான். 52

உமக்குரிமை ’ என்றுரைத்தாள் ; தமிழ்ப்பெண் ணன்றோ ?
உள்ளத்தே காதலினால் கடமை தன்னைக்
குமைத்துவிட்ட தமிழவேள் குதித் தெழுந்தான் ;
குறிக்கோளை யுணர்ந்துவிட்டான் ; ‘‘ அன்பே ’’ என்றான் ;
‘ சமைத்துவிட்ட போர்முடிப்பேன் ; வாகை சூடிச்
சான்றோர்முன் நினதுமண மாலை யேற்பேன் ;
நமைப்பிணைக்கும் வெற்றி ’ என்றான் ; நிமிர்ந்துநின்றான் ;
நங்கையவள் மலர்ந்துநின்றாள் ; கூற லானாள் :- 53

‘‘ அறங்காக்கும் அமைச்சர்மகள் நானே என்றால்,
ஆண்மைநிறைந் திடும்வீரர் தாங்கள் என்றால்,
திறங்காத்துத் துறைதோறும் ஓங்கி நிற்றல்
திருநாடாம் நம்நாட்டின் பண்பாம் என்றால்,
உரங்காத்து நீவிர்வரும் வரைக்கும் என்னை
உயிர்காத்து நலம்காத்துத் தங்கட்காக
நிறங்காத்து நிலைகாத்து வைக்கும் தெய்வம் ;
நெடுந்தகையீர் ! காத்திருப்பேன் ’’ என்றாள் செல்வி ! 54

மங்குகின்ற நிலவோடி முகிலுக் குள்ளே
மறைந்துகொள்ள வீதிவழி மரங்கள் செய்த
பொங்குநிழல் தனிற்புகுந்து அவனும் செல்லப்
பூவையவள் பார்த்திருந்தாள் ; கண்ணீர் மல்கி
எங்குறைந் தாலும்மெனது இதயந் தன்னில்
இருக்கின்றீர் ; அதனாலே இருக்கின்றேன் யான்
தங்குதடை யில்லை நமதுறவுக் கென்று
தனக்குள்ளே நினைத்தபடித் திரும்ப லானாள் ! 55

'என்னம்மா! இரவினிலே தனியே செல்ல
ஏதம்மா காரண'மேன் றருமை அன்னை
முன்னெய்த லும்வஞ்சி எண்ணந் தன்னை
முன்போலே நிலையாக்கிக் கொண்ட பின்பு,
'ஒன்றுமிலை' என்றுரைத்துச் சிரிக்க லுற்றாள்;
உளந்தளிர்க்கும் மகள்முகத்தை நோக்கும் அன்னை,
'அன்றியேன்ன வோஎனயான் எண்ணிவிட்டேன்;
அழகுமயில்! வாஉணவுக்' கேன்றழைத்தாள்! 56

6. போர் முரசு!

குடிமக்கள் உளமேல்லாம் மகதநாட்டுக்
குறும்பர்பலர் தீமைவிதை யிட்ட பின்பு
மடியின்றி வீணுரையாம் நீரை விட்டார்;
மனத்தமுதை நஞ்சாக மாற்றலுற்றார்;
"அடிமைகளா நாமேல்லாம்? அரசர் மாட்டு
அறமில்லை; உணர்வில்லை; நம்மைக் கண்டு
குடிக்கடன்கள் செய்வதிலை; இல்லை"யேன்று
குழப்பிவிட்டார்; மக்களேலாம் குழம்பலானார். 57

படைத்தலைவர் வீரப்பர் பழுது பட்டார்;
பண்பாக அறங்காக்கும் தன்மை இல்லை;
மடைத்தலையிற் புனல்போல மக்கள் மன்றம்
மடமடேன உயர்ந்தோங்கும் வகைசெய் யாமல்
அடைத்துள்ளார் திருவாயை; அமைச்ச ரேன்றால்
அதற்குமேல்; அரசாங்கம் இவ்வா றாமோ?
முடைத்தலைபோல் தீநாற்றம் தலையேடுத்தால்
முளைப்பதேங்கே நல்லரசு மணப்பூ எங்கும்? 58

என்றேல்லாம் ஒற்றர்பலர் நாட்டினுள்ளே
எழுப்பிவிட்ட சிறுகுறும்பால், மக்கள் கூடி
ஒன்றுமில்லை யேன்றுரைத்தால் பேச்சுத் தோன்ற
ஓரிடமும் இல்லையன்றோ? உண்மை உண்டு:
தேன்றலேன நந்தலைவர் தோன்றி னாலும்
தேள்மனத்தார் ஆகிவிட்டார் காலப் போக்கில்;
சேன்றதோரு காலத்தின் சிறப்பை யேல்லாம்
சிதைத்துவிட்டார் என்றேல்லாம் பேசலுற்றார்! 59

மாற்றர்சின் ஒற்றரேல்லாம் உருவ மாறி
மன்னர்அர சியற்பணியில் இருப்பார் போலத்
தோற்றமுடன் மனைதோறும் தோன்றி நின்றார் ;
தொலைத்திடுவோம் ; வரிதாரீர் தாரீர் என்று
ஆற்றலுடன் கூவிநின்றார் ; தரம றுத்தால்
அடிக்கலுற்றார் ; குடிகடமை வருத்தலுற்றார் ;
ஏற்றதன்று அரசியலார்க் கிந்தப் போக்கு
எமைக் காவா திருப்பீரோ ? என்றார் மக்கள். 60

தோடங்குங்கால் இல்லாத துயரப் போக்குத்
தோடங்குதலும் மக்கள்விரைந் தலறி நின்றார் ;
அடங்கியிருந் திடுமேம்மை அளவு மீறி
அரசுவரிச் சுமைகூட்டி வதைக்க லாமோ ?
முடங்கிற்றே மன்னர்மதி ? நாட்டி னுக்கு
முன்னேல்லாம் வேந்தருயிர் போலா வாரே ?
இடங்குறுகிச் சிறுத்ததுவோ இதயம் இன்று ?
எமைக்காக்க வாரீரோ எனவிளித்தார் ! 61

மருதப்பர் சேவிக்கிந்த செய்தி சேல்ல
மனங்குலைந்த மன்னர்தம் ஒற்றரேல்லாம்
அருகுவரப் பணித்தபின்பு கேட்க லுற்றார் ;
அறமாறிச் சிலபேர்கள் சேயலைக் கேட்டுப்
போருமிநின்றார் ; அரசவையைக் கூட்டச் சேய்தார் ;
புதுநாளின் அரசவைக்கு முரசு கோட்டிப்
பேருகுதலும் மக்களிடை அமைதி யேன்னும்
பேரியநிலை அரும்பிடற்குத் தோடங்கிற்றே. 62

மாற்றாரின் கையாட்கள் உருவ மாறி
மாண்புள்ள அரசுக்கு எதிரா நின்று
தோற்றது தோற்றுகின்ற சேயல்க ளேன்று
தோன்றிநின்ற போதினிலே ஒற்றன் வந்தான் ;
வேற்றவரின் படைமுழக்கம் கேட்டல் சோன்னான் ;
வேகுண்டுவரும் மகதத்தார் படையின் வேள்ளம்
கூற்றுவன்போல் நாற்காதத் தோலைவில் நாட்டைக்
குறுகிவரல் குன்றேறிக் கண்டேன் என்றான் ! 63

(வளரும்)

படைவீடுகள்

வித்துவான். திரு. சு. உமைதாணுப் பிள்ளை

1. பொருப்பர் பொருந்திடப் புதல்வி யாளோடும்
ஒருப்படு மனமுடன் ஒய்யா ரமாக
திருப்பரங் குன்றம் சேர்ந்த முருகனை
விருப்புடன் நெஞ்சே வீடுபெறத் தொழுவாய்.

2. வெந்தழி நரகில் வீழ்ந்துழ லாமல்
செந்திற் பதியில் தினமருள் புரியும்
கந்தனைக் கார்த்தி கேயனை நெஞ்சே
வந்தனை செய்திட மறுமை யறுமே.

3. பூவளம் பொழிய பொருள் வளம் குவிய
காவினங் கொழிக்கும் கண்கவர் காட்சி
ஆவிநன் குடியில் அமர்ந்த வேலனை
நாவினுல் ஏத்தி நலம்பெறு நெஞ்சே.

4. நாரகம் விட்டு நற்கதி வேண்டில்
சீரகத் தோங்கும் சேர நாட்டினில்
ஏரகம் மேவும் ஈடில் குமரனைத்
தாரக மாகத் தாழ்வாய் நெஞ்சே.

5. பொன்றிடும் நாளும் பொருந்திடும் முன்னே
நின்றிடும் பலபிணி நீங்கிட வேண்டில்
குன்றுதோ ருடுங் குமரனை முருகனை
என்றுமே ஏத்தி இறைஞ்சுவை நெஞ்சே.

6. கிழமுதிர் இளநலங் கிட்டும் சிவவொளி
பழமுதிர் சோலைப் பதியில் மேவும்
மழவிடை உடையான் மைந்தனை முருகனை
பழவினை நையப் பரவுவாய் நெஞ்சே.

7 தேரும் பரங்குன்று சீரலைவாய் நன்குடி
ஒரும் உயர்பதியாம் ஏரகம் யாரும்
படையாகுன் ருடல் பழமுதிர் சோலை
படைவீடா றென்றே பகர்.

இராமகண்டரும் சீகண்டரும்

[கீதை]

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரி

முதல்வன் அருளிய வேதாகமங்களே ஆஸ்திக சமயங்கள் எல்லாவற்றிற்கும் தலையாய பிரமாணமாகும். பொருளிலும் அளவிலும் விரிந்துகிடக்கும் அவைகளைப் பேரறிவுடையாரே அறியமுடியுமாதலின், தபோவலிமையினுல் அறிவாற்றல் பெற்ற முனிவர்கள் சிற்றறிவினர்க்கும் பயன்படக்கருதி ஆங்காங்கு கூறிய விஷயங்களை ஒருங்கே சேர்த்து ஸ்மிருதிகளை எழுதினர். இவை வேதாகமங்களுக்கு அடுத்தபடியான ப்ரமாணங்களாகும். முனிவர்களால் எழுதப்பட்ட இதிஹாஸ புராணங்களும் ஸ்மிருதிகளை ஒப்பனவே

சிவகீதை ராமகீதை ரிபுகீதை, கணேசகீதை, குருகீதை, அநுகீதை எனப்பல கீதைகளிருப்பினும் கீதை என்ற சொல் பகவத்கீதையையே விரைவில் நினைவூட்டும். பதினெட்டு பர்வங்கள்கொண்ட பாரதமென்னும் இதிஹாஸத்தில் பதினெட்டு அக்ஷௌஹிணிசேனை செய்த பதினெட்டு நாள் போரைப்பற்றித் தொடங்குங்காலத்தில் கண்ணபிரான் அர்ஜுனனுக்குச் செய்த உபதேசமாக பதினெட்டு அத்தியாயமுடைய பகவத்கீதை எழுந்தது. இது சுமார் 700 சுலோகங்கள் கொண்டது. எல்லா ஜாதியினராலும் எல்லா மதத்தினராலும் தங்களுடைய கொள்கைக்கு மேற்கோள்கள் கீதையினின்றும் காட்டப்படு கின்றன. செய்யுள் வடிவாகவோ உரைநடையாகவோ உலகில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அருஞ்சொற் பொருட்குறிப்பு, கருத்துரை, பொழிப்புரை, சொற்பொருள், விரித்துரை, சிற்றுரை, பேருரைநுட்பம் முதலிய பலவகையான உரைகளைப் பல மொழிகளிலுமுடையது.

அத்வைதம், சிவாத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்ற மதங்களைத் தழுவிய பாஷ்யங்கள் பிர்மசூத்திரத்திற்கு இருப்பனபோன்று கீதைக்கும் உள்ளன. அவற்றுள் சீகண்டர்

எழுதிய தத்வைகதர்சனம், காஷ்மீரதேசத்துப் பண்டிதரான அபிநவர் எழுதிய கீதார்த்தசங்கிரஹம், ராஜாநக ராமகண்டர் எழுதிய சர்வதோபத்ரம் என்ற உரைகள் சைவ சமயத்தைச் சார்ந்த உரைகளுள் சிறப்புடையன.

கீதைக்கு உரை எழுதுவது எளிதென நினைத்துச் சொற் பொருளை மட்டும் கூறிய சிலர் கீதையிலேயே முன்னுக்குப் பின் முரண்பாடுள்ளதாகத் தோன்றும் பகுதிகளில் ஒருவித பரிஹார மும் சொல்லாமற் சென்றனர். ஆதலின் கீதை முழுவதும் பரிசீலனை செய்து வாக்யார்த்தங்களை ஒற்றுமைப்படுத்தி ஸர்வதோபத்ரம் என்ற உரை எழுதுகிறேன் என்று இராமகண்டர் தொடங்குகிருர். உரைவிரிவானது. ஞானத்திற்கும் கர்மத்திற்கும் சமப்பிராதான்யம் கொடுத்து எழுதப்பட்டுள்ளது எனினும்,

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா (7 - 14)

என்ற சுலோக வியாக்கியானத்தை நாற்பத்தாருவது ஸ்பந்த காரிகையில் அப்படியே மேற்கோளாகக் காட்டி ஸ்பந்த காரிகைக்கு உரை எழுதியுள்ளமை கீதையின் உரை சைவ சமயத்தைச் சார்ந்தது என்பதை நன்கு புலப்படுத்தும். மனத் தூய்மையை உண்டுபண்ணுவதன் மூலமாக கர்மா ஞானத்திற்கு அங்கம் என்று கூறினுர் இல்லை. கர்மங்கள் செய்யவேண்டுவன என்பதைமட்டும் கீதையின்மூலம் வற்புறுத்துகிருர். ஞானம் வீடுபேறச் சாதனம் எனவும் அதைப்பெற யோகம் முதலியனவும் சொல்லப்படுகின்றன. சங்கரர் கொண்ட பாடத்தைக்காட்டிலும் பதின்மூன்று சுலோகங்கள் இராமகண்டர் அதிகமாகக் கூறு கிருர். மற்றும் சுமார் 200 இடங்களில் பாடபேதம் மூலத்தில் காணப்படினும் அப்பாடங்கள் பொருளில் மாற்றம் தருவன அல்ல. பல இடங்களில் பிற மதங்கள் கண்டிக்கப்பட்டாலும் பெயர் குறிப்பிட்டுக் கண்டிக்கப்படவில்லை. உரை சிறிது கடினமானது.

சுவேதாசார்யருடைய சிஷ்யராகிய சீகண்டர் பிர்மசூத்திரத் திற்குப் பாஷ்யம் எழுதியுள்ளார். அவரே கீதைக்கும் அதிகரண ப்ரஸ்தான ரூபமாக பாஷ்யம் எழுதியுள்ளார். (தன்னுடைய மதத்தைமட்டும் விரித்துரைப்பது அதிகரணப்ரஸ்தானம் எனவும் பிற மதங்களைக் கண்டிப்பதையே குறிக்கோளாகக்கொண்டது வாதப்ரஸ்தானம் எனவும் சொல்லுவது சாஸ்திரங்களில் வழக்கம்) என்னும் பிற மதங்களைக் கண்டித்து அவற்றிலுள்ள

தோஷங்களைக் காட்டாதவரையில், தன்னுடைய மதத்தை ஐயம் திரிபற உணர்வது கடினமாதலின் ஆங்காங்கு பிற மதங்களை யும் இலேசாகக் கண்டிக்கிறார். சீகண்டர் எழுதிய தத்வைக தர்சனம் என்ற கீதா பாஷ்யத்திற்கு விச்வேச்வர சிவாச்சாரியார் எழுதிய லகு டிப்பணி என்ற ஒரு சிற்றுரையும் உள்ளது.

உரையில் உபநிஷத் வாக்கியங்களும் ஸ்மிருதி வாக்கியங் களும் இலௌகிக நியாயங்களும் நிரம்பக் காட்டப்படுகின்றன. ஆவச்யகமான தத்துவ விசாரணை, கதைகள், பதவ்யுத்பத்தி, இலக்கணக் குறிப்பு இவற்றையும் காட்டத் தவறுவதில்லை. யாவரும் எளிதில் உணரும்படியான நடையில் உள்ளது. தொடக்கத்தில் உள்ள மங்கள சுலோகம் பிர்மசூத்திர பாஷ்யாரம் பத்தில் உள்ளதே இங்கும் காணப்படுகின்றது.

பகவான் விஷ்ணுவினால் கூறப்பட்டது என்ற பொருளையே "பகவத்கீதா" என்ற பதத்திற்குப் பெரும்பாலான உரை யாசிரியர்கள் காட்டிச் சென்றனர். சீகண்டரோ பகவனாகிய சிவனுடைய தத்துவம் என்ற பொருளை பகவத்கீதா என்ற பதத்திற்கு உரைக்கிறார்.

ஐச்வர்ய மக்ரய மனுபாதிமதீச லக்ஷ்மீர்
ஞானம் ச வீர்ய யசஸீ ச வீராகதா ச
ஏதே குணாஷ் ஷடபிதே பகஸம்ஞயோக்தா:
ஸந்தீதி தேன பகவன் பகவானஸி த்வம்.

ஐச்வர்யம், திரு, அறிவு, வீரம், புகழ், வைராக்கியம் என்ற ஆறும் பகம் என்ற சொல்லால் உணர்த்தப்படும். இவற்றோடு எப்பொழுதும் கூடியவர் பகவான். (எப்பொழுதும் கூடியவன் என்பது உடைமைப்பொருளை உணர்த்தும் விகுதியினால் பெறப் படும்).

ஐச்வர்ய மீச்வர பதச்ருதி ருக்ர சப்தோ
வீர்யம் யச சிவபதம் ச தவாபீதத்தே
ஸர்வஞ்ஞ காமரிபு சப்த ஸமர்த்திதௌ ச
ஸார்வஞ்ஞ ராகவிரஹௌ பவத: புராரே
அர்த்தச் ச்ரியயா தவந கோபி விரஜ்யதஸ்தே
ச்ரேஷ்டஸ்தயா த்வமாஸி தாசதயீபிருக்த:.

வேதத்தில் கூறப்படுகிற ஈச்வரன், உக்ரன், சிவன், சர்வக்ஞன், காமரிபு என்ற சொற்கள் முறையே ஐச்வர்யம், வீரம், புகழ்,

முற்றுணர்வு, வைராக்கியம் இவற்றை உணர்த்துவன. வைராக்கியம் கொண்ட உமக்குச் செல்வத்தால் யாது பயன்? அங்ஙனமாகவும் உம்மைச் செல்வத்திற் சிறந்தவன் என்கிறது ரிக்வேதம். இவ்வித வாக்கியங்களைக்காட்டி சிவபெருமானே பகவான் என்ற சொற்பொருள் ஈசனுடைய அருளால் பூதங்களின் தோற்றம், அழிவு, போக்கு, வரவு, அறிவு, அறியாமை இவற்றை அறிந்தவர்களையும் பகவான் என்பது உபசாரமே. அவ்விதம் கூறினும் கண்ணபிரானுடைய உயிருக்குயிராக இருந்து சிவனுல் கூறப்பட்டது என்பதும் பொருந்தும்.

ஸர்வாந்தரோ ஹ்யேஷ:

என்ற உபநிஷத்தும்,

ஈச்வர: ஸர்வபூதானும் ஹ்ருத்தேசேர்ஜுன திஷ்டதி (18-61)

என்ற கீதாவாக்யமும் ஈச்வரன் அந்தர்யாமியாக உள்ளவன் என்பதைப் புலப்படுத்துவன.

ஈச்வரன் என்ற சொல் நிருப பதமாக (அடைமொழியின்றி) கூறப்பட்டால் சிவபெருமானையே குறிக்கும். இதனுலேயே கவிகளிற் சிறந்த காளிதாஸன்,

யஸ்மின் ஈச்வர இத்யனன்ய விஷய:சப்தோ யதார்த்தாக்ஷர:

(வேறொருவரையும் உணர்த்தாத ஈச்வரன் என்ற பொருட் பொருத்தமுடையதாக உள்ளது) என்று கூறுகிருர். இன்னும் கிராமங்களில் சிவன் கோவிலை ஈச்வரன் கோவில் என்றே சொல்லுவதும் கவனிக்கத்தக்கது.

பகவத்கீதை சிவபரம் என்பது விச்வருப அத்தியாயத்தைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு நன்கு புலப்படும். அதில்

த்ரஷ்டுமிச்சாமி தே ரூபம் ஐச்வர்யம் புருஷோத்தம (11-13)

என்று ஈச்வரனுடையதான ஸ்வருபத்தைக்காண விரும்புகிறேன் என்று அர்ச்சுனன் வேண்டுகிருன். அப்பொழுது கிருஷ்ணன் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்னும் நீதியை மனத்திற்கொண்டு

நது மாம் சக்யஸே த்ரஷ்டும் அனேனைவ ஸ்வசக்ஷுஷா
திவ்யம் ததாமி தேசக்ஷுஃ ப்ச்ய மே யோக மைச்வரம் (11-8)

இந்தக் கண்ணால் பார்க்க முடியாது. சக்திரூபமான திவ்யமான கண்ணைத் தருகிறேன், என்னிடமுள்ள ஈச்வர யோகத்தைப்பார் என்று கூறி அருட்சக்தியாம் கண்ணைக் கொடுக்கிறார். பிறகு

தர்சயாமாஸ பார்த்தாய பரமம் ரூப மைச்வரம் (11-9)

அர்ச்சுனனுக்கு ஈச்வர ஸ்வரூபத்தைக் காட்டினார். இங்கு அர்ச்சுனனுடைய வேண்டுகோள், கண்ணனுடைய பதில் யாவற்றிலும் ஈச்வர என்ற சொல்லே ஆளப்படுகிறது காண்க. (ஐச்வரம் - ஈச்வரனுடையதான) கடைசியில்

ஸ்வகம் ரூபம் தர்சயாமாஸ பூய:

...பும் தன்னுடைய ஸ்வரூபத்தைக் காட்டினார் என்று கூறு... இதுவரையில் அர்ச்சுனன் கண்டது கண்ணனுடைய ரூபமில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. (தொடரும்)

திருமுறை இன்னிசைவாணர்,

வேலூர், க. சோக்கலிங்கம்

பண் - மலயமாருதம்] [பாணி - ஆதி

பண்ணியல்

சித்தம் இன்னும் இரங்கவில்லையா செல்வ
முத்துக் குமரனே அறுமுகனே உன் (சித்தம்)

துணைப் பண்ணியல்

எத்தனையோ பிழை என்னிடம் இருந்தாலும்
அத்தனையும் பொறுத்து ஆள்வதுன் பாரம்ஐயா (சித்தம்)

பண்ணியல் முடிவு

இத்தரணியில் அன்பர் இன்பமோடும் வாழச்
சித்தா மிர்தத்தடஞ் சூழும் வேலூருறை
அத்தன் வைத்தியன் மகனேஎன் மீதுஅன்பு
வைத்திட லாகாதா வடிவேலனே உன் (சித்தம்)

முத்தமிழ் குறுமுனிக் கருளிய நாதனே
நித்தம் நினைபவர் நெஞ்சில் வாழ்பவனே
தத்துவ மெய்ஞ்ஞானச் சரவண பவனே
பத்தியோடு சோக்க லிங்கம் பணிகுகனே. (சித்தம்)

"மனை மாட்சி"

திரு. க. சம்பந்தன்.

விரிபுனலுடுத்த பெருநிலமடந்தையின் மடியகத்துத்தவழும் மக்கட்கு உறுதிப்பொருள்களாகக் கூறப்படுவன "அறம், பொருள், இன்பம், வீடு" என்னும் நான்காகும். இதை வட நூலார் "தர்மார்த்த காம்ய மோட்சம்" என்று கூறுப. இறுதி யாகிய 'வீடு' உரை மனம் கடந்து நிற்பதொன்றாகலின், அதை நூல்களான் உணரமுடியாது. ஏனைய மூன்றுமே நூல் களான் உணரமுடிகின்றன. திருக்குறளும் அம்மூன்றையே முப்பாலாகப் பகுத்துள்ளது. அம்முப்பாலுள் "அறம்" என்பது இல்லறம், துறவறம் என இரண்டு வகைப்படும். ஈண்டு இல்லறத்தின் இன்றியமையாததாகிய 'மனைமாட்சியை'ப் பற்றியே இவண்யாம் கூறப்புகுவதாகும்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை."

என்றார் வள்ளுவர். "அறிவு, ஆண்மை, பெருமை" என்னும் மூவகை யாற்றலுள்ளுஞ் சிறந்து; நல்லொழுக்கமுடையவனாய்; சிறந்தவன் என்பதற்குத் தக்க சீரிய பண்புகள் யாவும் மிக்க வனாய் உள்ள தலைமகன் 'இல்வாழ்க்கை' என்ற ஒன்றைத் தொடங்கி, இயல்புடைய மூவருக்கும் இனிய அறத்தை நன்கு செய்யவேண்டுமானால், அவன் ஒரு துணைப்பேறு கொண்டே செய்தல் வேண்டும். அத்துணைப்பேறும் ஒரு பெண்ணாகவே இருத்தல் வேண்டும். அப்பெண்ணையே 'வாழ்க்கைத் துணை நலம்' என்றார் வள்ளுவர். வாழ்க்கைத் துணையாகக் கருதப் படும் 'மனைவி'யில்லாத வாழ்க்கை வாழ்க்கையாகாது. இல்லக் கிழத்தியில்லாத வீடு பாழானதாகும்.

"பாழே, மடக்கொடி யில்லா மனை" என்று ஔவையாரும் "மனைக்குப் பாழ் வாணுத லின்மை" என்று விளம்பிநாகனாரும் விளம்பினமையைக் காண்க.

ஒரு வீடானது கார் தவழும் மாடம் பல நிறைந்ததாய் மாட்சிமைப்பட்ட காவல்களை உடையதாய் விளங்கினாலும் அவ்வீடு, இழையினால் எரியும் சிறிய அகல் விளக்கு இல்லை யென்றால் எத்தன்மைத்தோ? அது போன்றதே மனைவி யில்லாத வீடும் ஆம். மேலும், விரும்பத்தக்க மாண்பு நிறைந்த மனைவியைப் பெருதவன் வீடு காணக்கிடைக்காத ஓர் அரிய காடுபோன்றதுமாம்'' என்று நாலடியார் நன்கு நவிலு கின்றது.

'' மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பாய்
இழைவிளக்கு நின்றிமைப்பி னேனும் — விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்
காண்டற்(கு) அரியதோர் காடு.''

என்ற பாடலை யுணர்க. இவ்வாறே ஔவையாரும்

'' இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின் — இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூ(று) ஆய் விடும்''

என்று கூறுவதையும் இனிதுணர்க.

மனைவி யில்லாத வீடு பாழ்பட்டதும்; சிறிய விளக்கு மில்லாத பெரிய மாடம் போன்றதும், அரிய காடுபோன்றதும்; புலிவாழும் தூறு (புதர்) போன்றதும் ஆம். எனவே, மனைவி யுள்ள வீடு நல்லதோர் பொலிவும், ஆக்கமும், விளக்கமும் பெற்றுத் திகழுமென்பது தானே போதரும்,

'' மனைக்கு விளக்கம் மடவாள்''

'' மனைக்(கு) ஆக்கம் மாண்ட மகளிர்''

— நான்மணிக்கடிகை,

என்பதனால் அவ்வுண்மையை யறிக.

மேற்கூறிய சில ஏதுக்களினால் ஒருவன் இல்வாழ்க்கை யினிதியற்ற இல்லக்கிழத்தி மிகமிக அவசியம் என்பதை யறிந்தோம். இல்லக்கிழத்தி இருந்துவிட்டால் மட்டும், போதுமா? இல்வாழ்க்கை யினிது நடைபெற வேண்டுமானால், தலைவன் தலைவியாகிய இருவருக்கும் மன ஒற்றுமையும் வேண்டும். '' ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு'' என்பதையும் இவண் ஓர்க.

சமத்துவமின்றி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்தல் வேண்டும். இல்லையேல் வாழ்க்கை செம்மையுறாது. "கண்கள் இரண்டும் ஒரே ஞான்று ஒரு பொருளையே பார்த்தல் போன்று தலைவன், தலைவி இருவரும் ஒவ்வொரு செயலையும் மனமொத்துச் செய்தல் வேண்டும்; கலந்த அன்புடையவராய் வாழ்தல் வேண்டும்." என்று கூறுகின்றார் சிவப்பிரகாசர்.

"காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய்! நோக்கற்றான்
கண்ணிரண்டு மொன்றையே காண்."

என்ற நன்னெறிப் பாடலைக் காண்க.

'இல்வாழ்க்கை' என்பது இரண்டு மாடுகளைப் பூட்டிய சகடம் போன்றது என்றும் கூறுப. "கலந்த அன்புடைய தலைவனும், தலைவியுஞ் சேர்ந்து செலுத்தினாற்றான் 'இல் வாழ்க்கை' என்னும் இனிய - சிறந்த - உயர்ந்த சகடம் நன்கு இயங்கும். ஒருவர் மட்டும் இயக்கினாலும் அது இயங்காது தடைபட்டுப்போம்" என்பதை,

"மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டீர்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்று மியல்புடைய வான்சகடம்
செல்லாது தேற்றிற்று நின்று."

என்ற அறநெறிச்சாரத்தானறிக.

இவ்வாறு இல்வாழ்க்கைக்கு ஏற்புடையவளாகக் கருதப்படும் இல்லக்கிழத்தி என்பாள் இனிய பல பண்புகளும், நல்ல செயல்களும் பெற்றிருத்தல் வேண்டும். அப்போதுதான் இல் வாழ்க்கை என்பது பிறருடைய பழிப்பிற்கும், இழிப்பிற்கும் இடனாகாது; நல்ல செழிப்பிற்கும், கொழிப்பிற்கும் இடனாகி இனிது விளங்கும். 'இல்வாழ்க்கைக்குரிய பெண்கள் இன்ன இன்ன நற்பண்புகளையும், நற்செயல்களையும் பெற்றிருத்தல் வேண்டும்" என்று பல அறிஞர்கள் பலவாறு கூறிப்போந்துள் ளனர். அவற்றுள் சிலவற்றை இவண் காண்பாம்

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

" தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். " —குறள்

" கட்(கு)இனியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்(கு)உடையாள் ஊராண் இயல்பினாள்—உட்கி
இடனறிந்(து) ஊடி யினிதி னுணரும்
மடமொழி மாதராள் பெண். " —நாலடியார்

" உருவோ(டு) அறிவுடையாள் இல்வாழ்க்கைப் பெண்என்ப."

—நான்மணிக்கடிகை

" கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை
கண்டது கண்டு விழையாமை—விண்டு
வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி
உறுப்போ(டு) உணர்வுடையாள் பெண், "

" மடப்பதூஉம் மக்கள் பெறுவதூஉம் பெண்பால்
முடிப்பதூஉம் எல்லாருஞ் செப்புவர்—படைத்ததனால்
இட்(டு)உண்(டு) இல்வாழ்க்கை புரிந்துதாம் நல்லறத்தே
நிற்பாரே பெண்டீரென் பார். " —அறநெறிச்சாரம்

எனவே, மேற்கூறிய சில பாக்களினால் " மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளைப் பெற்றிருத்தல், வருவாய்க்குத் தக்க செலவு செய்தல், கற்பினின்றும் தன்னை வழுவாது காத்தல், தன் தலைவனை உணவு முதலியவற்றால் நன்கு பாதுகாத்தல். நன்மையமைந்த புகழ்மையைக் காத்தல், தளர்ச்சியில்லாதிருத்தல், கணவன் கண்ணுக்கு இனிதாகக் காட்சி தருதல், காதலன் விரும்பும் வண்ணம் தன்னை நன்கு அழகுபடுத்திக் கொள்ளுதல், உள்ளம் உடையாதிருத்தல் செவ்வியறிந்து ஊடுதல், ஊடிப் பின் நன்கு உணர்தல், நல்ல வனப்போடு நல்லறிவும் பெற்றிருத்தல், காதலன் குறிப்பறிந்தொழுகல், நாணமுடையவராயிருத்தல் கண்ட பொருள்களையெல்லாம் விரும்பாமலிருத்தல், வெறுக்கத்தக்க செயல்களைச் செய்யாதிருத்தல், பிறர் பொருள்களை விரும்பாமலிருத்தல். நல்ல உணர்வு பெற்றிருத்தல் அறம் புரிந்து நடத்தல், ஐயம் இட்டுப் பின் உண்டு வாழ்தல், நன்னெறியில் நிற்றல் முதலிய நல்ல செயல்களையும், நல்ல பண்புகளையும் நன்கு பெற்றவர்களே 'பெண்கள்' என்று கூறுவதற்குத் தகுதிவாய்ந்தவராவர் என்பதும், இவர்களே மனைவிக்குரிய மாட்சிமையைப்பூண்டவராவர்" என்பதும் நாம் நன்கு அறியலாம். (தொடரும்)

தருமையாதீன வெளியீடுகள்

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்.

(மலர் 20, இதழ் 2, பக்கம் 117 இன் தொடர்ச்சி)

எண் 27. கிளிவிடு தூது

இயற்றியவர்: ஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பல சுவாமிகள். வெளியிட்டோர்: 24 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப் படி சீகாழி திரு. ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை அவர் களால் ஆராயப்பெற்று ஒடுக்கம் ஸ்ரீமத் சிவகுருநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வெளியிடப்பெற்றது. முதற்பதிப்பு 1938. இரண்டாம் பதிப்பு:- வெளியிட்டோர் 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி முதுபெரும் புலவர் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களால் ஆராயப்பெற்று வெளியிடப்பட்டது.

கிளிவிடு தூது: தூது தமிழில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களின் வரிசையில் அமைந்த ஒன்று. இந்நூல் தமது அருட்குரவர் தருமையாதீனம் 8 ஆவது மகாசந்நிதானம் அழகிய திருச்சிற்றம்பல தேசிக சுவாமிகளிடத்துக் கிளியைத் தூது விடுவதாக அமைந்துள்ளது. 158 கண்ணிகள் கொண் டது. 1 முதல் 9 வரை இறைவனுடைய அருட் பிரபாவங் களும் 16 வரை அவ்விறைவன் ஆன்மாக்களுக்குப் பரபோகம் ஊட்டுவதற்காகக் கண்ணுதல் கண்டக்கறைமான் மழு முதலிய வற்றை மறைத்து சம்பந்தன் எனப் பேர்தாங்கி வந்ததும் 20 வரை தருமையில் நிகழும் ஒலிகளின் சிறப்பும் கூறப்பட் டுள்ளன. 122 வரை தம் ஞானாசாரியரை பாலாருகவும் அமுத மாகவும் கரும்பாகவும் உருவகிக்கின்றார்.

140 வது கண்ணிகள் வரை தசாங்கச்சிறப்பு கூறப்படுகிறது. 141 வது கண்ணிமுதல் கிளியாகிய நீ குருசந்நிதானத்திற் சென்று "தேனே கனியே கருணைபொழிகாரே பவ அரவின் பல்பட்ட புண்ணுர வந்த மருந்தே எனத்துதித்து" அடியேன் விண்ணப்பம் ஒன்றுண்டு அதனைத் திருச்செவிமடுத்தருள வேண்டும். தேவரீர்மீது விடாய்கொண்டு சித்தம் நைந்து நின்ற பெண்ணுக்குத் திருநோக்கமளித்துப் பேரின்பமும் அளிக்க வேண்டும்" எனப் பேசி அதற்கு அடையாளமாகத் தேவரீரது கொன்றைமாலையைத் தந்தருள வேண்டுமெனக் கூறி அதை நீ கையிலே வாங்கிக்கொண்டு விரைவில் வருவாயாக எனக் கூறப்படுகிறது.

எண் 28. திருமுலைப்பால் சிறப்பு

வெளியிட்டோர்: 24 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணைப்படி வெளியிடப்பெற்றது. முதற்பதிப்பு 1939. இரண்டாம் பதிப்பு 1941.

சீகாழியில் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு தோணியப்பரும் அம்பிகையும் எழுந்தருளி அழுகை தீர்த்து அருட்பால் அளித்த வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிவிப்பது. இந்நூல் எல்லோரும் படித்து உணரும் வகையில் சிறுநூலாக வெளியிட்டப்பட்டது.

எண் 29. பதிபசுபாசத்தொகையும், திருவருட்பயன் உதாரணக் கலித்துறையும்

வெளியிட்டோர் 24 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி சீகாழி திரு. ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களால் பார்வையிடப்பட்டு திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத். இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகளால் வெளியிடப்பட்டது. 1940.

பதிபசுபாசத்தொகை: இயற்றியவர் - மறைஞான தேசிகர். உரை. சீகாழி ஸ்ரீ மறைஞான தேசிகர். பதிபசுபாசத் தொகை என்னும் இந்நூல் தத்துவத்திரயம் என்னும்முப்பொருள்

உண்மையை விளக்குவது. பாயிரம் பதியியல், பசுஇயல் பாச இயல் அநுக்ரக இயல் என்னும் பகுதிகளாய் 25 குறள் வெண் பாக்களால் இயற்றப்பெற்றுள்ளது.

திருவருட்பயனும் உதாரணக் கலித்துறையும்: இயற்றியவர்; திருவருட்பயன்-உமாபதிசிவம். உதாரணக் கலித்துறை- காவை அம்பலவாணர். உமாபதி சிவாசாரியார்: தில்லைவாழந் தணர் குலத்தில் தோன்றி வடமொழி தென்மொழியில் சீரிய புலமைபெற்று மறைஞானசம்பந்தரின் சீடராய்த் தமதாசிரியரின் முழங்கை வழியே வழிந்த பரிகலச்சேடம் உண்டு பக்குவ ரானுர். தில்லைவாழந்தணர்களால் புறக்கணிக்கப்பெற்றுக் கொற்றவன் குடியிலே வாழ்ந்தார். 'நடராஜப்பெருமான் நாம் உமாபதி சிவத்தின் பேழையுள் இருக்கின்றோம். அவர் வந்தாலன்றித் திருவிழாக் கொடி யேருது' என்று அசரீரியாய்ச் சொல்ல மீண்டும் தில்லைவாழந்தணர்களால் வரவேற்கப்பெற்ற சிறப்புடையவர். சிவபெருமானிடம் சீட்டுக்கவி பெற்றுவந்த பெத்தான் சாம்பான் என்பானுக்கும் முள்ளிச்செடிக்கும் முத்திகொடுத்த அற்புத நிகழ்ச்சி இவர் வரலாற்றில் குறிப்பிடத் தக்கது. இவர் அகச்சந்தான குரவரில் நான்காமவர்.

காவை அம்பலவாணர்: தருமையாதீனத்திருக்கூட்டத்து அடியவர்களில் ஒருவர். இவர் வெள்ளியம்பலவாணத்தம்பிரான் சுவாமிகளிடம் பாடங்கேட்டவர்கள் எனத் தெரிகின்றது.

உதாரணக்கலித்துறை: இந்நூல் திருவருட்பயன் 100 குறட்பாக்களுக்கும் உதாரணக்கலித்துறைப் பாடல்களாயமைந் துள்ளது. திருவருட்பயனையே மேற்கோளாகக் கொண்டு ஆக்கப்பெற்றுள்ளது. 100 கட்டளைக் கலித்துறையான் ஆயது. திருவருட்பயனுக்குச் செய்யுள் விரிவுரை என்று இதைக் கூறலாம்.

எண் 30. சிவஞான தேசிகர் நான்மணிமாலை

வெளியிட்டோர்: 24 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆணைப் படி சீகாழி திரு. ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர் களால்பார்வையிடப்பட்டு திருச்சிராப்பள்ளிமௌனமடம் கட்டளை

விசாரணை ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வெளியிடப்பட்டது. 1940.

இயற்றியவர்: ஸ்ரீ சதாசிவபண்டாரம். 250 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த ஒரு பெரியார். இவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின் மாணவர்.

நான்மணிமாலை: வேண்பா கலித்துறை விருத்தம் அகவல் இவை முறையே அந்தாதியாய் வர 40 பாடல்களால் நான்கு மணிகளால் இயன்ற மாலைபோல ஆக்கப்படுவது. இந்நூல் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்மேல் பாடப் பட்டது. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் தருமையாதீனத் துப் பத்தாவது மகாசந்நிதானமாக விளங்கியவர்கள். 12 நூல் களுக்குமேல் இயற்றியருளியவர்கள். இவர்களின் பெருமையை விளக்கும் சிறந்த நூல் இது. குருமூர்த்திகள் செய்த பற்பல சித்திகளை விரித்துரைப்பது. சொற்சுவை பொருட்சுவை மிக்கது. இந்நூலோடு பின் இணைப்பாக 6 ஆவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்மேல் திரு. சிதம்பரநாத முதலியார் அவர்கள் பாடிய தோத்திரப்பாடலும், செந்தமிழ் மொழியின் சிறப்பியல் கூறும் ஒரு இரட்டைமணி மாலையும் சேர்க்கப்பெற்றுள்ளது.

செந்தமிழ் இரட்டைமணிமாலை: இது ஒரு தனிச்சிறப் புள்ள நூல். தருமையாதீன அடியார் குழாத்துள் ஒருவராய் விளங்கிய ஸ்ரீமத் சண்முகத் தம்பிரான் சுவாமிகளால் இயற்றப் பெற்றது. தமிழுலகு இந்நூலைக் கற்றுத் தமிழின் சிறப்பியல் உணர்தல் நல்லது. பின்வரும் சில பாடல்களைப் பாருங்கள்.

முக்கண்ணனுக்கு முத்தமிழும் முக்கண்:

மேலாந் தமிழ்மூன்றும் மேவுமுக் கண்ணாக
ஏலா உலகதனை ஈன்றளித்தோன் — மாலாக
முச்சங்கத் தும்மிருந்து முன்காத்தான் அத்தமிழை
இச்சங்கத் துங்காப்பான் இன்று.

சிவபிரான் செந்தமிழ் விருப்பால் பல்லுருக்கொண்டது:

முன்னாள் முதலிது காறும் இறைவன் முதுதமிழைப்
பன்னாள் பயின்று நசைதீர்ந் திடாது பலமுறையும்
மன்னாய்க் குருவாய் மகவாய்ச் சுரராய் வளர்குறியாய்த்
துன்னு யெழுந்து வதிவா னெனில்தமிழ் சொல்லுமதே.

நால்வர் பரவிய நற்றமிழ்:

சொல்லும் அரசும் சுடர்காழிப் பிள்ளையும்மால்
வெல்லும் திருநாவல் மேதகையும் — புல்லும்
புறச்சமய கோளரியும் போற்றியது தெய்வத்
திறத்தமிழோ ஏனையவோ செப்பு.

எண் 31. திருபுவனத் தலமகிமைச் சுருக்கம்

வெளியிட்டோர்: 24 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி வெளியிடப்பட்டது 1940. மூன்றாங் குலோத்துங்க சோழனால் திரிபுவனேசுவரம் என்னும் இக்கோயில் கட்டப் பட்டது. அச்சோழனுக்குரிய திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பட்டமே இக்கோயிலின் பெயராயிற்று. தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம் கோயில்களின் அமைப்பைப் போலவே அமைந்தது இக்கோயில். இக்கோயிலின் சிறப்புக் களைத் தொகுத்துச் சிறு நூலாக வெளியிட்டுள்ளார்கள் இத் தலத்தில் உள்ள சரபர் என்ற மூர்த்தி தனிச்சிறப்புடையது. இங்குள்ளதுபோல சரபர் திருவுருவம் வேறு எங்குமில்லை என்று கூறுவர். கண்கண்ட தெய்வமாய் விளங்கும் இம்மூர்த்தி இக் கோயிலில் தனிச்சிறப்போடு விளங்குகின்றது. இத்தலப் பெருமையை விளக்குவது இந்நூல்.

எண் 32. கீர்த்தித்திருவகவல்

வெளியிட்டோர்: 24 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 1941. மணிவாசகப்பெருமானால் அருளிச்செய்யப் பெற்ற அகவல்களில் இரண்டாவதாய் விளங்குவது இது. பாராயணத் திற்குரியது. சிவபரம்பொருளின் திருவருட்பேற்றை அடையச் செய்வது. கீர்த்தி - புகழ்.

எண் 33. ஸ்ரீ குருஞானசம்பந்தரின் வரலாறும் சில பாசுரங்களும்

வெளியிட்டோர்: 24 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

தருமையாதீனத்தை நிறுவிச் சமயந்தழைக்க-தெய்வத்தமிழ் தழைக்கத் திருக்கயிலாய பரம்பரையில் முதற்பெருங்குரவாய் விளங்கியவர் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் வரலாற்றைச் சுருங்க உரைப்பது. அவர்கள் பாடியருளிய குருதோத்திரப் பாடல்களில் சில இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

This is a divine experience to go round and worship in this shrine. Everything here inspires the mind and heart. The upkeep of the temple is excellant.

(Sd.) K. Veeraswami,
Judge, High court, Madras.
3—9—61.

I visited the temple for the earboring cermony of my grand - daughter, the facilities afforded to me for that purpose and the darshan of the deities which followed. left nothing undesirable. The arrangments were excellent. The temple is kept neat and tidy. One and all without difference rich or poor are afforded full facilities for darshan and worship. The members of the temple staff fully co-operate with the worshipping public. I pay my respects to His Holiness Mahasannidhanam.

(Sd.) R. Ramachandram Pillai,
Chief Electrical Engineer, Neyveli.
17—8—61,

" நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் "

புலவர்: திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

ஊமனார் கனா :

ஊமர்கள் 'கையிற் சொல்லிக் கண்களிற் கேட்டிடும்' இயல்பினர். அவர்கள்தம் மனத்தின்கண் எண்ணுவனவற்றைப் பிறர்க்கு எடுத்துச்சொல்லி நிறைவேற்றிக்கொள்ளும் இயல்பின ரல்லர். ஆதலின், நிறைவேற்றல்பெறாது மனத்தின்கண் வெறும் எண்ணமாத்திரையாய் நின்றொழியும் செயல்களை 'ஊமனார் கனா' என வழங்குதல் உண்டு. தக்கன் சிவபிரானை விலக்கி ஏனைத் தேவர்களை மட்டும் உடன்கொண்டு இயற்ற நினைத்த வேள்வி யானது, நிறைவேறாவண்ணம் சிதைத்தொழிக்கப்பட்டது. அச் செய்தியினை,

" தாமலார் போலவே தக்கனார் வேள்வியை
ஊமனார் தங்கனா வாக்கினான் ஒருநொடிக்
காமனார் உடல்கெடக் காய்ந்தஎங் கண்ணுதல்
சேமமா உறைவிடம் திருவுசாத் தானமே "

எனவரும் தேவாரப் பாடலில் ஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார். " ஊமனார் தங்கனா வாக்கினான் " என்னும் தொடர்,

" நோயினும் நோயா கின்றே கூவற்
குராலான் படுதுயர் இராவிற் கண்ட
உயர்திணை யூமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் தோழி நோய்க்கே. "

(குறுந் - 224)

" ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற் கரிதே. "

(குறுந் - 58)

" கண்ணில் ஊமன் கடற்பட் டாங்கு
வரையளந் தறியாத் திரையரு நீத்தத்து
அவல மறுசுழி மறுகலில்
தவலே நன்றுமன் தகுதியும் அதுவே." (புறம் - 238)

என்பனபோன்று வரும் சங்கப் பாடலின் கருத்துக்கள் பல வற்றையும் நினைவிற்குக் கொணர்ந்து இன்புறுத்தும் தகையதாய் இலங்குகின்றது.

தொல்காப்பியம் :

இம்மட்டோ! தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற சங்கநூல்களின் கருத்துக்களும் சாயல்களும் பிறவும், நமது திருஞானசம்பந்தப் பெருமானின் பாடல்களில் ஆங் காங்கே அமைந்து விளங்கி, "நற்றமிழ் வல்ல" அவர்தம் நலனை நன்கினிது புலப்படுத்தி நிற்கின்றன.

" கருகுகுழல் மடவார் கடிகுறிஞ்சி யதுபாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன் றடைவோமே"

என்னும் திருஞானசம்பந்தர் திருமொழி முருகனைக் குறிஞ்சி நிலத்திற்குத் தெய்வமாகக் குறிப்பிட்டுணர்த்தும் தொல்காப்பிய மரபினைத் தழுவியதாதல் காணலாம். இங்ஙனமே,

" வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல் லாம்அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே"

எனவரும் 'திருப்பாசுரப் பாடல்' தொல்காப்பியம் குறிப்பிடும் "அமரர்கண்முடியும் அறுமுறை வாழ்த்தையே" அடிப்படை யாகக் கொண்டுள்ளமையும் கருதியுணரற்பாலது. "அமரர்கண் வந்துமுடியும் எனவே, அமரர் வேறு என்பதூஉம், அவர் கண்ணே வந்து முடிவன வேறு என்பதூஉம் பெற்றும். அவை முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும் ஆம். இவை தத்தம் சிறப்புவகையான் அமரர் சாதிப்பால என்றல் வேதமுடிவு". என ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் உரைவிளக்கமும் இக்கருத் தினை வலியுறுத்தும்.

திருக்குறள் :

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமானரின் பாடல்களில் ஆங்காங்கே திருக்குறளின் சாயல்களும் அரிதமைந்து கிடக்கின்றன.

"நன்றியர்ல் வாழ்வ துள்ளம் உலகுக்கோரு நன்மையாலே
கன்றினர் மும்மதிலும் கருமால் வரையே சிலையாப்
போன்றினர் வார்சுடலைப் போடிநீறணிந் தாரழல் அம்பு
ஒன்றினல் எய்த பெம்மான் உறையுமிடம் ஒற்றியூரே"

என்னும் தேவாரப் பாடல் "எந்நன்றி கோன்ரூர்க்கும் உய்வுண் டாம் உய்வில்லை செய்ந்நன்றி கோன்ற மகற்கு" என்னும் திருக்குறளைத் தழுவி அமைந்ததுபோலக் காணப்படுகின்றதன்றோ ?

"அகர முதலானை அணியாப்ப னூரானைப்
பகரும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே"

"சலத்தினற் போருள்கள் வேண்டுதல்
செய்யாத் தன்மையார் நன்மையால் மிக்க
உலப்பில்பல் புகழார் ஓமமாம்
புலியூர் உடையவர் வடதளி யதுவே"

"தோண்டர் அஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்பலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும்இடம் என்பரால்"

"ஆறினர் போய்யகத்து ஐயுணர் வேய்திமேய்
தேறினர் வழிபடு தேன்குடித் திட்டையே"

"அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசேற்
றைம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர் கோயில்"

என்பன போன்ற தேவாரப் பாடல்களில் முறையே, 'அகரமுதல எழுத்தேல்லாம்' 'சலத்தாற் போருள் செய்தே மார்த்தல் பசுமட் கலத்துள்நீர் பேய்திரீஇ யற்று' 'உரனேன்னும் தோட்டி யான் ஓரைந்துங் காப்பான்' 'ஐயுணர் வேய்தியக் கண்ணும்

பயமின்றே மெய்யுணர்வில்லா தவர்க்கு' 'அகனமர்ந்து செய்யாள் உறையும்' 'ஒருமையுள்ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின்' 'மலர்மிசை ஏகினுன்' என்பன போன்ற பல திருக்குறள்களை நினைவுகூரப்பெறுகின்றேம்.

சிலப்பதிகாரம் :

பண்டைக்காலத்தில் 'ஊரெனப்படுவது உறையூர்' எனப் போற்றப்பெற்றுவந்தது. அவ்வுறையூரினை ஆசிரியர் சேக்கிழார் பெருமான் 'மலர்புகழ்வண் டமிழ்ச்சோழர் வளநாட்டு மாமூதூர், உலகில்வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையூராம் உறையூர்'' எனப் புகழ்ந்து போற்றியுள்ளனர். அத்தகைய உறையூர்க்குக் ''கோழி'' என்னும் பெயர் வழங்கிவந்ததென்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றது. முற்காலத்து ஒரு கோழி ஓர் யானையைப் போரில் வென்று கோன்ற சிறப்புடமைபற்றி, அவ்விடத்து அமைத்த நகர்க்குக் 'கோழி' என்பது பெயராயிற்று. இச்செய்தியினை,

> ' முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
> புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென் ''

என்னும் சிலப்பதிகார வரிகளால் இனிதுணரலாம். இங்கு 'முறஞ்செவி வாரணம்' என்றது யானையையும் 'புறஞ்சிறை வாரணம்' என்றது கோழியையும் குறிக்கும். உறையூர் நகரம் அமைக்கப்பட்ட போழுது கோழியைப் போலச் சிறையும் கழுத்துமாக ஆக்கப்பட்டதென்பர் அரும்பதவுரைகாரர். புறத்தே இறகினையுடைய கோழிபோலப் புறத்தே சேரிகளையுடைய உறையூர் கோழியூர் எனப்பட்டதென்பர் அடியார்க்குநல்லார். உறையூர்க்குக் 'கோழி' என்னும் பெயருண்டு என்பது,

> '' குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
> வடமலைப் பெயர்குவை யாயின், இடையது
> சோழநன் ஞட்டுப் படினே, கோழி
> உயர்நிலை மாடத்துக் குறும்பறை அசைஇ '' (புறம் - 67)

> '' கோழி யோனே கோப்பெருஞ் சோழன்
> பொத்தில் நண்பிற் பொத்தியோடு கெழீஇ
> வாயார் பெருநகை வைகலும் நக்கே '' (புறம் - 212)

எனவரும். புறநானூற்றுப் பாடல்களாலும் அறியப்படுகின்ற தாயினும், அப்பெயர்க் காரணத்தினைச் சிலப்பதிகாரமே செவ்வி தின் உணர்த்துகின்றது.

" தென்னன்கோழி எழில்வஞ்சியும் ஓங்குசெங் கோலினன்
மன்னன் முக்கீச் சரத்தடிகள் செய்கின்ற தோர்மாயமே "

" வடமன்நீடு புகழ்ப்பூதி யன்தென்ன வன்கோழிமன்
அடலமன்முக்கீச் சரத்தடிகள் செய்கின்றதோர் அச்சமே "

என்னும் ஞானசம்பந்தர் தேவாரப் பாடல்களில் உறையூர் கோழி எனக் குறிப்பிடப் பெற்றுள்ளமை கருதுதற்குரியது.

" விளங்கிழை மடந்தைமலை மங்கையோடு பாகத்து
உளங்கொள இருத்திய ஒருத்தனிடம் என்பர்
வளங்கெழுவு தீபமோடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே "

என ஞானசம்பந்தர் குறிப்பிடும் நளனைப்பற்றிய செய்தி,

" வல்லா டாயத்து மண்ணர சிழந்து
மெல்லியல் தன்னுடன் வெங்கான் அடைந்தோன்
காதலிற் பிரிந்தோ னல்லன் காதலி
தீதொடு படூஉம் சிறுமையள் அல்லள்
அடவிக் கானகத்து ஆயிழை தன்னை
இடையிருள் யாமத்து இட்டு நீக்கியது
வெவ்வினை யன்றோ......? " (சிலம்பு - 14,50-56)

எனச் சிலப்பதிகாரத்தின்கண்ணேயே, முதன்முதலாகவும் பழமை வாய்ந்ததாகவும் தமிழிலக்கிய வரிசையிற் குறிப்பிடப்பெற் றுள்ளது.

" வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. "

என்னும் தேவாரவரிகள்,

" பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிறல் ஊர்களும் "

என்னும் சிலப்பதிகார வரிகளை நினைப்பிக்கும் திறத்தனவாயுள் ளன. இங்ஙனம் முத்தமிழ்விரகராகிய சம்பந்தரின் பாடல்களில்

முத்தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தினை நினைப்பூட்டும் பகுதிகள் மிகப் பல உள்ளன.

" பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின்றெங்கும்
காசினியிற் கொணர்ந்தட்டும் கைதல்சூழ் கழிக்கானல் "

என்னும் தேவாரவரிகள்,

" ஓடுந் திமில்கொண்டு உயிர்கொல்வர் நின்ஐயர்
கோடும் புருவத்து உயிர்கொல்வை மன்நீயும் "

" வலைவாழ்நர் சேரி வலையுணங்கும் முன்றில்
மலர்கை ஏந்தி
விலைமீன் உணங்கற் பொருட்டாக
வேண்டுருவங் கொண்டு வேறோர்
கொலைவேல் நெடுங்கட்
கொடுங்கூற்றம் வாழ்வது
அலைநீர்த்தண் கானல் அறியேன் அறிவேனேல்
அடையேன் மன்னோ "

என்பனபோன்று வரும் பாடல்கள் சிலப்பதிகாரக் கானல்வரிப் பகுதிகளை இலக்கிய நெஞ்சுடையவர் நினைவில் எழுப்புகின்றன. இன்னோரன்னவை யனைத்தும் ஈண்டு எடுத்துக்காட்டற்பாலன அல்ல. இதுகாறும் கூறியவற்றால் 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர்' என்னுந் தொடர் எத்துணை உண்மை பொருந்தியது என்பது இனிது புலனாகும்.

PRESIDENT'S SECRETARIAT,
Rashtrapati Bhavan.
NEW - DELHI 4.

No. F. 34(3)-G/61

August 11, 1961
Sravana 20, 1883 (Saka)

Dear Sir,

I am desired by the President to thank you and the members of the Staff Association of Sri Guru Gnanasambandar High School, Dharmapuram, for your kind message of good wishes.

Yours faithfully,
(Sd.) A. W. Hopcroft,
Under Secretary.

செய்திகள்

தருமையாதீனம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு
இரண்டாவது கோடி அர்ச்சனை

தருமையாதீனத்தில் திருக்கோயில்கொண்டு அருள்வழங்கும் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு உலகக்ஷேமார்த்தம் இரண்டாவது கோடி அர்ச்சனை தொடங்கி நடைபெறுகிறது. இதுவரை ஒருகோடியே எண்பதுலக்ஷம் அர்ச்சனை நடைபெற்றுள்ளன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள், அன்பர்கள் பலரும் பங்குபற்றும்வண்ணம் குறைந்தசெலவில் அர்ச்சனைகள் செய்வதற்கு ஏற்ப வசதிகள் செய்தருளியிருக்கின்றார்கள்.

தருமையாதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களில்
நவராத்திரி விழா - லக்ஷார்ச்சனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான கீழ்க்கண்ட தேவஸ்தானங்களில் நவராத்திரி விழா நாட்களில் லக்ஷார்ச்சனை நடைபெறும். ஏனைய தேவஸ்தானங்களில் சகஸ்ரநாமார்ச்சனை நடைபெறும். 1. சீகாழி. 2. வேளூர். 3. திருபுவனம். 4. திருப்பனந்தாள். 5. திருவையாறு. 6. திருக்கடவூர். 7. திருக்குவளை.

வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குக் கோடி அர்ச்சனை தொடங்கி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மாயூரம் - குமரக்கட்டளை
ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில்
லக்ஷார்ச்சனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில், ஸ்கந்தசஷ்டித் திருவிழா நாட்களில் லக்ஷார்ச்சனை 5—11—61 அன்று தொடங்கி

14—11—61 அன்று பூர்த்திசெய்யப்பேறும். கலியுகவரதராகிய ஸ்ரீ கந்தப்பெருமானின் திருவருளைப் பேற விரும்பும் அன்பர்களும் லக்ஷார்ச்சனையில் பங்குபெற்று உய்வதற்காகக் குறைந்த செலவில் சகஸ்ரநாமார்ச்சனை செய்ய வசதிசெய்யப்பட்டுள்ளது. சகஸ்ரநாமார்ச்சனைக்கு ரூ. 3—00. அர்ச்சனைக்குப் பணம் அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு M. O. மூலமாகவும், நேராகவும் பணத்தைச் செலுத்தி அர்ச்சனை செய்யலாம். குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், மாயூரம் டவுன்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில் பாரதி விழா

தமிழ்க் கல்லூரியின் ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தில் கடந்த 14—9—61 வியாழன் அன்று பாரதி விழா மாயூரம் திரு. M. கிருட்டினமூர்த்திப் பிள்ளை அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கழகச் செயலாளர் ஜே. தியாகராாசன் அறிக்கை படித்தவுடன் மாணவர்களில் கு. சிதம்பரம் பாரதியார் பாடல்களைப் பாடினார். பின்னர் போன். முத்தையன், சண்முகபாலன், ந. பழநி, அ. ஞானசுந்தரத்தரசு ஆகியோர் முறையே ''பாரதியின் தேசியப்பாடல்கள்'', ' பாரதியின் காதற்பாடல்கள்'', '' உரைநடைப்பணிகள்'' '' தெய்வப்பாடல்கள்'' என்ற தலைப்புக்களில் தெள்ளிதின் பேசினார்கள். கல்லூரி முதல்வர் (பொறுப்பு,) செஞ்சோற்கோண்டல். வித்துவான். திரு. சோ. சிங்காரவேலனார், B. A. அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவில, ந. இராமலிங்கம் இறைவாழ்த்துப் பாடியவுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

மறைஞானசம்பந்தர் திருநாள்
மெய்கண்டார் கழகத் துவக்க விழா

ஆவணி மாதம் உத்தரவிண்மீன் கூடிய திருநாளான 10—9—61 திங்கட்கிழமையன்று ஆதீனக் கல்விநிலைய மாணவர்கள் சைவ சித்தாந்தக் கல்லூரியின் சார்பில் மறைஞானசம்பந்தர் திருநாளைக் கோண்டாட ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயிலில் இனிதே கூடினார்கள். தேவாரப் பாடசாலை மாணவர்களின் தேவார இன்னிசை இன்னமுதாய் மாணவர்களின் செவியில்

முன்னதாகப் பாய்ந்து பயன்பெருக்கிறது. பின்னர் வழிபாடு நடைபெற மாணவர்கள் சிவபுராண இன்னிசையுடன் ஆலய வலங்கொண்டு ஸ்ரீ மகாலட்சுமிதுர்க்காதேவி திருமுன்னர்க்கூட, கூட்டம் ஆரம்பம் ஆயிற்று.

உயர்திரு. வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனார் B. A., அவர்கள் துவக்கஉரை ஆற்றினார்கள். அன்னார் தமது உரையில் சைவ சித்தாந்தத்தின் மாட்சியைத் தெளிவாக விளக்கினார்கள். இச்சைவ சித்தாந்தக் கல்லூரி எதிர்காலத்தில் ஒரு பல்கலைக் கழகமாக மிளிரும் என்றும், புறநிலையில் விஞ்ஞானத்துறையில் பல வழிகளில் முன்னேறி இருக்கும் உலகம் உள்நிலையில் ஆன்மீகநெறியில் சூன்யமடைந்து இருப்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டினார். ஆன்மீகசூன்யத்தை நீக்கி ஆன்மீகநிறைவு பெற இவ்வுலகம் என்றுவது ஒருநாள் விரைவில் வரஇருக்கிறது. அந்நிலையிலும், இனி எந்நிலையிலும் இச்சைவ சித்தாந்தக் கல்லூரி உலகினுக்குக் கலங்கரை விளக்கமாய் இருந்து ஒளி செய்வது திண்ணம். அவ்வமயம் இக்கல்லூரியின் கழகத்தைத் துவக்கி, பெயர் சூட்டி, முதல் உரையாற்றப்போகும் பேராசிரியர் அவர்களின் உரையும் இக்கூட்டமும் பெறப்போகும் வரலாற்று முக்கியத்தைக்கூறி எல்லாவற்றிற்கும் கயிலை ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்களின் அருளாசி துணைபுரியும் என்று கூறி வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களைக் கழகத்திற்குப் பெயர் சூட்டி உரையாற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்பு பேராசிரியர் அவர்கள் சந்தானகுரவர்களின் வரலாற்றினைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினார்கள். "உமாபதி சிவாசாரியார் தமக்குரிய விருதுகளுடன் சிவிகையில் செல்கிறார். அச்செலவைக் கண்ட மறைஞான சம்பந்தர் "பட்டகட்டையில் பகற்குருடு போகின்றது" என்கிறார். இதனைச் செவியுறுகிறார் மலபரிபாகமும், சத்திநி பாதமும் கைகூடப்பெற்ற சிவஞானசீலரான உமாபதிசிவனார். விரைந்து மறைஞானசம்பந்தர் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகிறார் .மறைஞானசம்பந்தர் உண்டுகொண்டு இருந்த கூழ் ஒழுக அதனைக் கீழே விழாமல் தம் கைகளில் ஏந்தி புசித்தார் உமாபதிசிவனார். அன்னாரது அதிதீவிர பக்குவ நிலையை விளக்கிய பேராசிரியர் அவர்கள் பக்குவநிலைகளை

ஆண்டுள்ளோர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு சீரிய முறையில் கூறினர்.

புறச்சந்தானகுரவர்களில் ஒருவரான மறைஞானசம்பந்தர் திருநாளன்று புறச்சந்தானகுரவர்களில் முதல்வரும் சிவஞான போதத்தைச் செய்தருளியவருமான மெய்கண்டார் திருப் பெயரை கழகத்திற்குச் சூட்டினர். சிவநாமம் மங்கல வாழ்த் தொலியாக முழங்கியது. பின் சங்க இலக்கியங்களில் சைவ சித்தாந்தம் எவ்வாறு பயின்று உள்ளது என்பதை விளக்கினர்.

சிரோமணி வித்துவான், திரு. சபேசன் அவர்கள் திருநீல கண்ட நாயனர் அவர்களின் வரலாற்றைத் தெளிந்தமுறையில் எடுத்துக்கூறினர். திருநீலகண்டரது சிவபக்தியையும் உறுதி யையும் அவரது அடியார் சேவையினையும் கூறி இறைவன் அவருக்கு அருள்புரிந்தவாற்றை விளக்கினர்.

ஆதீன அடியவர் உயர்திரு ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் கந்தர்கலிவெண்பா மாட்சியையும், குமரகுருபர சுவாமிகள் சிறப்பையும் பெரியவர்களின்வரலாற்றினைக் குறித்து வைக்கவேண்டிய அவசியத்தையும் அவ்வாறு குறியாது விட்டதனல் சந்தானகுரவர்போன்ற சான்ருேர்களின் வரலாறுகள் முழுமையும் தெரியாமல் மக்கள் இடர்ப்படுவது ஆகியவை குறித்து சிறப்பான உரையாற்றினர்கள். அடுத்து ஆதீன அடியவர் ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் ஒன்று பட்ட மனநிலையுடன் வழிபாடு செய்யவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி ஓர் சுருக்கமான உரையைச் சிறப்புடன் ஆற்றி னர்கள். திரு. சோ. சிங்காரவேலனர் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறை வெய்தியது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் தல யாத்திரை

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 3—10—61 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு வடதிருமுல்லைவாயில் என்ற தலத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். இத் தலத்து இறைவர் திருப்பெயர்

மாசிலாமணீஈசுரர். இறைவி திருப்பெயர் கொடியிடைநாயகி. இத்தலத் திருப்பதிகத்தை, சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், சங்கீதபூஷணம், திரு. பி. சுவாமிநாதன் அவர்களும் முறையாக பத்துமுறை ஓத அர்ச்சனை நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்குப் பொன்னுடையும் பட்டாடையும் கொடுத்துச் சார்த்தச்செய்து ஆராதனைகள் செய்வித்து வழிபட்டருளினார்கள்.

4—10—61 புதன்கிழமை காலை 4-மணிக்குச் சென்னையில் இருந்து திருக்காளத்திக்கு எழுந்தருளினார்கள். திருக்காளத்தியப்பர் கண்ணப்பரின் அன்பை வெளிப்படுத்திய பெருமான். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காளத்தியப்பரையும் அம்மையையும் பட்டாடைகள் அணியச்செய்து வழிபட்டார்கள்.

காலை 8-மணிக்குள் வழிபாடுகளை முடித்துக்கொண்டு திருப்பதிக்குச் செல்லத் திருவுள்ளம். அதன்படியே 8 மணிக்குக் காளத்தியிலிருந்து திருப்பதிக்கு எழுந்தருளினார்கள். கீழத் திருப்பதியிலிருந்து மலையில் 14 மைல் மேல் ஏறவேண்டும். திருப்பதி தரைமட்டத்திலிருந்து 14 கல் தொலைவும் 3500 அடிகள் உயரமும் கொண்டவை. ஏழுமலை என்பது திருப்பதியின் மறுபெயர். அதற்கேற்ப ஆறுமலைகளைக் கடந்துதான் ஏழாவது மலையை அடையவேண்டும்.

காலை 11 மணிக்கு மேலைத் திருப்பதிக்கு எழுந்தருளினார்கள். திருப்பதி தேவஸ்தானம் பேஷ்கார் அவர்கள் நல்லன்பர். உடல் பொருள் அனைத்தும் திருவேங்கடவனுக்கே என்று அர்ப்பணம் செய்தவர். அவன் திருவடிச் சேவையையே பெரிதென மதிக்கும் இயல்புடையவர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்களின் திருவருள்பாலிப்பைப் பெற்றவர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருப்பதிக்கு எழுந்தருளுகின்றார்கள் என்று கேட்டவுடன், சென்னையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து அவர்களைச் சிறந்த முறையில் வரவேற்று உபசரித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தங்குவதற்கு ஒரு தனிக் கட்டிடம் ஒன்றையும் ஏற்பாடு செய்துதந்தார்கள்.

நாடோறும் ஆயிரமாயிரம் மக்கள் வந்துசேல்வதையும் சுவாமி தரிசனம் சேய்யப் பலமணிநேரம் காத்து வரிசையாய் நிற்பதையும் பார்க்கும்போது கல்மனமும் கரைந்து கடவுள் உணர்வு அரும்பும்.

திரு. பேஷ்கார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களை வரவேற்று திருவேங்கடவன் சந்நிதிக்கு அழைத்துச்சென்றார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஏழுமலையானின் இன்னருட்காட்சியை ஆயிரமுகத்தால் கண்டு அனுபவித்தார்கள். வேங்கடாஜலபதிக்குப் பெரிய நீலப் பொன்னுடை ஒன்றை வழங்கிச் சார்த்தச்சேய்தார்கள். நீலமேனி நேடியோனுக்கு ஏற்ற அந்நீலச்சால்வை இருபுறங்களையும்தழுவி நின்றது. திருவடிகளில் காணிக்கைகள் சார்த்தச்சேய்தார்கள். சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் திருப்பாடல் களைப் பாடினார். எல்லோர் கண்களிலும் ஆனந்தக்கண்ணீர் பேருகி வழிந்தது. மிகச் சிறந்த வழிபாடாக அன்றைய வழிபாடு அமைந்தது.

திருவேங்கடவனைத் தனித்திருந்து ஏகாந்தசேவை சேய்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வேளியேவந் தார்கள். உண்டியலடிக்குச் சென்று பலர் கையிலும் பணத்தை அள்ளிக்கோடுத்து உண்டியலில் போடச்சேய்தார்கள். தரிசனம் முடித்துத் தங்கும் விடுதிக்கு எழுந்தருளினார்கள். புதிய புதிய கட்டிடங்கள் நாடோறும் தோன்றிக்கோண்டேயிருக்கும் காட்சி யும் மக்கள் ஆயிரமாயிரமாக வந்து மீளும் காட்சியும் இத்தலத் திற்குத் தனிச் சிறப்பு. பலகோடி ரூபாய்கள் ஆண்டுதோறும் திருப்பதி உண்டியலில் நிரம்பி வழிகின்றன. அவையனைத்தும் கல்விச்சாலைகளாக - மருத்துவமனைகளாக - தர்மசாலைகளாக பலப்பல சமூகப் பணிகளுக்குப் பயன்பட்டுவருகின்றன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மாலை 3 மணிக்கேல்லாம் திருப்பதியைவிட்டுப் புறப்பட்டு திருத்தணிக்கு எழுந்தருளினார்கள். மாலை 6-30 மணிக்குத் திருத்தணி வந்து நின்றது உந்தூர்தி. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுள்ளே எழுந்தருளும் நேரத்தில் தீபாரா தனை நடந்துகோண்டிருந்தது. முருகப்பேருமானுக்குப் போன் னுடை கோடுத்துச் சார்த்தச்சேய்து வழிபட்டார்கள். அர்ச்சனை

ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. இரவு 8 - 30 மணிக்குத் திருத்தணியிலிருந்து சென்னைக்கு எழுந்தருளினார்கள்.

5—10—61 வியாழக்கிழமை அன்று காலை 7-30 மணிக்கு மயிலாப்பூர் கபாலீசுவரர் வழிபாடு நடைபெற்றது. மாலை 4 - 30 மணிக்கு சென்னையிலிருந்து அச்சிறுபாக்கம் என்னும் தலத்திற்கு எழுந்தருளினார்கள். அச்சிறுபாக்கத்திறைவனை அர்ச்சனை ஆராதனைகள் செய்து வழிபட்டுக்கொண்டு இரவு தருமைக்கு எழுந்தருளியானார்கள்.

மணிக்கழல்சேர்த்திடு !

வே. நடாதூர்நம்பி

எடுப்பு

என்னுளந் தனிலே இலகிடும் முருகா
இன்னருள் தந்திட இனிதுமே வாவா (என்னுளந்)

தொடுப்பு

பொன்னடி நண்ணிடும் என்னையும் சோதனை
புரிந்திடல் முறையோ தண்ணுளத் தேவே (என்னுளந்)

முடிப்பு

துயரேனும் சேற்றினில் அழுந்தியே வாடிடும்
துன்பினைக் கண்டுமேன் மௌனமோ? சொல்லுவாய்
பிணிமுதல் கவலைகள் பிணைத்திடா முறையிலே
மணிநிகர் உன்னடி நிழலிலே சேர்த்திட (என்னுளந்)

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்

மானமேன் ணுதவர் மாதுலன் மாமனை வாழ்ந்திருப்போர்
ஈனமேன்ன ணுதவர் தாரத்தினாற்பிழைப் பெய்தியுள்ளோர்
ஞானமேண் ணுதவர் நாமேபரமென்று நாட்டிடுவோர்
ஊனமேன் ணுதவர் தேவர்க்கென விரந்துண்பவரே. 92

i

| எதிர்காலம் | ☞ கே. முத்துஜோதிடர் |

(பிலவஞ ஐப்பசிமீ 1௳ முதல் 30௳ முடிய)
(17—10—61 முதல் 15—11—61 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி ஒன்பது பாதங்களும் மிசிர பலனைத் தரும், சுக துக்கம் சமமாகும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். அதிக சேலவினங்களும், ஈதிபாதைகளும் உண்டாகி விலகும். சுப சோபனதிகள் ஏற்படச்செய்யும். ஞாயிறு, செவ்வாய் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

விருஷபராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். அதிக சேலவினங்கள் கோடுத்து சந்தோஷத்தை உண்டுபண்ணும். அடிக்கடி சஞ்சார பலனைத்தரும். நஷ்டமான போருள்கள் தானே வந்துசேரும். கிரய விக்ரயங்கள் ஏற்படச் செய்யும். உலகில் நன்மதிப்பு உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் வீண் அலைச்சல்களைத்தரும். காரியம் விக்னமாகும். ஆரோக்கியக் குறைவு காட்டும், அதிக சேலவினங்கள் ஏற்படச்செய்யும். திருவாதிரை நான்கு பாதங்களும் ஆரோக்கியம் உண்டுபண்ணும், வித்தியாவிருத்தி ஆகும். தேய்வபலம் பிரகாசிக்கும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் சுபமிராது. சத்துருபாதை ஏற்படச்சேய்யும். சேய் காரியங்கள் நஷ்டம் அடையும். மித்திரர்களும் விரோதம் ஆவார்கள். மேலோர் பேரியோர் மனவருத்தம் ஏற்படச்சேய்யும், தேய்வபலம் ஒதுங்கிநிற்கும். சனி, சேவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மகத்தான சந்தோஷத்தைத் தரும், வம்சவிருத்தி ஆகும். தோழில் ஓங்கும். தேய்வபலம் முன்

நிற்கும். தன, தான்ய விருத்திகள் ஏற்படச் செய்யும். கடன் நிவர்த்தியாகி மனம் சந்தோஷம் அடையும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுப சந்தோஷத்தைத் தரும். உத்தியோக உயர்வு ஏற்படச் செய்யும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கைகளும், கிராம பூமி லாபங்களும், மேலோர் பெரியோர் சேர்க்கைகளும் ஏற்படும். மனம் நிம்மதி அடையும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾, ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். தொழில் ஓங்கும். நஷ்டமான பொருள் தானே வந்துசேரும். தெய்வ பலம் பிரகாசிக்கும். எவராலும் இதுவரையிலும் பார்த்தும் கேட்டுமிராத விசேஷ அற்புதச் செயல்கள் பிரகாசிக்கும். சதா தெய்வீகத் தோற்றம் உண்டாகிக்கொண்டே இருக்கும். சுப சோபனுதி மங்கள காரியங்களும் மகா தான தர்மாதி புண்ணிய பலன்களும் கிடைக்கச்செய்யும். வெள்ளி, சனி சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் தொழில் ஏற்றத்தைத் தரும். கிரக, பூமி லாபங்கள் கிடைக்கச்செய்யும். வித்தியாவிருத்தி ஆகும். எதிர்பாராதபடி தனலாபம் ஏற்படும். எங்கும் நிறைந்த கீர்த்தியும், வேகு ஜனங்களால் கொண்டாடப்படும் தன்மையும் ஏற்படச்செய்யும். மஹா யக்ஞபலன், புண்ணியக்ஷேத்திர வாசம் பெரியோர் தரிசனம் முதலியவை கிடைக்கும். சதா தெய்வசிந்தனையாகவே இருக்கச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் ¼ அனுஷம், கேட்டை

விருச்சிக் ராசி 9 பாதங்களும் ஆரோக்கியம் உண்டு பண்ணும். இல்லறசுகம் விசேஷமாகும். குடும்பம் ஓங்கும்.

நூதன கிரக, பூமிலாபங்களும், வஸ்திராபரணச் சேர்க்கைகளும் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூல நட்சத்திரம் 4 பாதங்களும் மிஸ்ர பலனைத்தரும். மனம் சாந்தி அடையாது. மத்திய காலத்தில் சில சுபமும் உண்டாகும். பூராடம் 4 பாதங்களும், உத்திராடம் முதல் பாதமும் சுபமாகும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். நினைத்த தெல்லாம் கைகூடும். தெய்வபலம் முன்நிற்கும், குடும்பம் ஓங்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும், உயர்பதவிகளைத் தரும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். ஆரோக்கியம் உண்டாகும். சுப சோபனதிகள் ஏற்படும். எதிர்பாராத தனலாபங்கள் கிடைக்கும், கிரக, சுகம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் சஞ்சார பலனைத் தரும். மங்களம் உண்டாகும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரங்கள் வரும், தொழில் ஓங்கும். கிரய, விக்ரயங்கள் ஏற்படும். நூதன பிரபு தரிசனம் உண்டாகும். மனம் சந்தோஷம் அடையும். புதன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும், சுகவாழ்வை உண்டுபண்ணும், உத்தியோக லாபம் ஏற்படும். நஷ்டமான பொருள்கள் வந்து சேரும். ஸ்தாவர, ஜங்கம சொத்துக்களின் கிரய, விக்ரயங்களெல்லாம் உண்டாகும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். உலகில் நன்மதிப்பு ஏற்படச் செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு:- ஷை மாதம் உலகில் இயற்கைகள் பலவிதமாக மாறி நடக்கும். ஸஸ்யங்களுக்கும், தானியங்களுக்கும் ஈதி பாதைகள் ஏற்படும். தோற்றுநோய்கள் அதிகம் காட்டும். தென்னாட்டில், தெய்வபலம் விசேஷமாகி, மேற்கண்ட தோஷங்களை எல்லாம், விலகச் செய்யும். தென்தேசத்தில் பெரியோர்கள் சாதுக்கள், தபோதனர்கள் தோன்றி உலக க்ஷேமத்திற்காக ஆத்ம சக்தியால் சதா பாடுபட்டுக்கொண்டு உலகத்தை ரக்ஷிப்பார்கள். மற்ற மகாஜனங்களும், மேற்கண்ட பெரியோர்களை அனுசரித்து துவேஷபுத்தி இல்லாமலும், நாஸ்திகம் இல்லாமலும் ஆங்காங்கு தெய்வவழிபாடுகளை சரிவர நடத்திக்கொண்டு வரத் தேசம் பூராவும் சுபிட்சம் அடையும். கடவுள் காப்பார்.

EXTRACT FROM THE VISITORS' BOOK,

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Through the pressing invitation of Sri Vaithinathan, I was privileged to offer worship this morning the Lord Veluran. This is the 1st time in my life I visit this important shrine. At the entrance to the shrine, you face the pucca roofed portico like structure in the place of thatched roofing you so often see. As you enter you are struck by the tidiness of the well paved prakarm. The entrances to a temple must be kept scrupulously tidy in order to induce a right attitude of reverence to the worshipper. The tank unlike the Pushkarinis elsewhere is full of clean water and is placed right in front of Thayanayaki.

At every shrine I worshipped from Vinayaka, Angaraka, Lord Muthukumaraswami and Veluran Chief Deity the manthras were sung in perfect time and reverence. Far from hindering or coming between the worshipper and the Lord, the manthras when devoutly listened to gently led you to attune yourse[illegible] and

commune with the Lord. Lavishly money has been spent in improvements. Shrines were excellent. All the staff gave willing and cheerful aid and one had to come away reluctantly after the splendid Darshan and worship. One word should be added to refer to the modern services provided at the distribution midday meal for Elementary school children, a good library and hall for holding religious discourses. May the Lord bless us and the efficient administration who have so well maintained the institution and its services. The people who clamour taking away the Endowments and those who abuse the administration of the institutions by the Adhinam should do well to visit and see for themselves how under the care of the enlightened and devout His Holiness the Adhinam the best service is given to the institution and ever growing class of religious minded worshippers.

(Sd.) M. S. Venkatramana Iyer,
Mylapore, Madras.
2—9—'61.

EXTRACT FROM THE VISTORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Amirthakateswaraswamy Devasthanam.
Tirucadaiyur.

We were greatly impressed on the warm reciption given to us by the temple authorities and we express our greatful thanks for all the help rendered to us in our worship in all sannadhis we were hughly pleased at the excellent way in which every item of temple worship is maintanced. The temple is kept exceedingly clean and tidy.

(Sd.) C. V. Nagarajan.
Administration Officer, Agl. Dept. Madras.
10—9—61.